# இராமநாதபுரம் அரண்மனை

அருங்காட்சியகக் கையேடு



# இராமநாதபுரம் அரண்மனை

அருங்காட்சியகக் கையேடு

# இராமநாதபுரம் அரண்மனை

## அருங்காட்சியகக் கையேடு

பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.
ஆணையர் (பொறுப்பு)

ஆசிரியர்

முனைவர் **வெ. வேதாசலம்**
காப்பாட்சியர் (ப.நி)

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2014

முதற்பதிப்பு : 2007
இரண்டாம் பதிப்பு : 2014
பக்கங்கள் 68
பிரதிகள் 1000

வெளியீட்டு எண். 190

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

நூலின் பெயர் :
இராமநாதபுரம் அரண்மனை அருங்காட்சியகக் கையேடு

பதிப்பாசிரியர் :
முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.

விலை : ரூ. 52.00

அச்சிட்டோர் :
சைதை எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக், எழுதுபொருள்., மற்றும் கல்வி சார்ந்த
பொருட்கள் பழுது நீக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
எண். 84, 4-வது மாடி, நந்தா குடியிருப்பு,
காரணீஸ்வரர் கோயில் தெரு, சைதாபேட்டை, சென்னை-15

வெளியிட்டோர் :
தமிழ்வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.
தொலைப்பேசி : 28190020, நிகரி : 28190023
மின்னஞ்சல் : tnarch @ tn.nic.in
archcommissioner @ gmail.com.
வலைதளம் : www.tnarch.gov.in.

# பொருளடக்கம்


| வ.எண். | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | |
| 1. | இராமநாதபுரம் அரண்மனை இராமலிங்க விலாசம் | 1 |
| 2. | தொல்லியல் அருங்காட்சியகம் | 14 |
| 3. | சேதுபதி மன்னர்கள் | 18 |
| 4. | சேதுபதிகளின் சிறப்புப் பெயர்கள் | 20 |
| 5. | சேதுபதி காசுகள் | 29 |
| 6. | துணைபுரிந்த நூல்கள் | 42 |
| 7. | நிழற்படங்கள் | 44 |

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்பில்., பி.எச்டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை-600 008
நாள் : 05-03-2014

# பதிப்புரை

இராமநாதபுரம் மாவட்டம், இராமலிங்கவிலாசம் என வழங்கப்படும் அரண்மனையினைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கி.பி. 1978 முதல் பாதுகாக்கப் பெற்ற வரலாற்றுச் சின்னமாக அறிவித்துப் பாதுகாத்து வருகிறது. பொதுமக்கள் அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் இவ்வோவியக் கருவூலத்தைக் காத்து வருகிறது. கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டின் அரசியல், சமயம், பண்பாடு, நாகரிகம், நுண்கலை, சமுதாயம் ஆகியவற்றைக் புரிந்துகொள்ளத் துணைசெய்யும் வரலாற்றுக் கருவூலமாக இராமலிங்க விலாச சுவரோவியங்கள் திகழ்கின்றன. இவ்வோவியக்கூடத்தின் முன் மண்டபத்தில் சேதுபதிகளின் வரலாறு, பெருமை, மறவர் நாட்டின் மாண்பு ஆகியவற்றைப் புலப்படுத்தும் வகையில் அருங்காட்சியகம் ஒன்றைத் தொல்லியல் துறை அமைத்துள்ளது.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க அரண்மனையின் பெருமைகளை அனைவரும் அறியும் வகையில் இராமநாதபுரம் அரண்மனை அருங்காட்சியக் கையேடு மறுப்பதிப்பாக தொல்லியல் துறை தற்போது வெளியிடுகிறது. சேதுபதி மன்னர்களின் வரலாறு, அரண்மனை, கோட்டை, இராமலிங்க விலாச சுவரோவியங்கள், அருங்காட்சியகத்தில்

காட்சிப்படுத்தப்பட்டுள்ள தொல்பொருட்கள், சேதுபதி செப்பேடுகள், கல்வெட்டுகள், சேதுபதிகளின் அறக்கொடைகள், சமயப்பணிகள் குறித்து விளக்கமாக இந்நூலில் பாங்குற எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலை உருவாக்கிய நூலாசிரியர் முனைவர் வெ. வேதாசலம் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார். இந்நூலின் மறுபதிப்புப் பணியினை மேற்கொண்டு சிறப்புற வெளிக்கொணர்ந்த அச்சுப்பிரிவிற்கு பாராட்டுகள். வரலாற்று ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இந்நூல் அரிய வழிகாட்டியாக அமையும் எனக் கருதுகிறேன்.

சி. வசந்தி

# இராமநாதபுரம் அரண்மனை
# இராமலிங்க விலாசம்

## சேதுபதிகள்

பழைய இராமநாதபுரம் மாவட்டத்தினை ஆண்டவர்கள் சேதுபதிகள். சேதுக்குத்(கரைக்கு) தலைவர்கள் என்ற பொருளில் சேதுபதி என அழைக்கப்பட்டனர். மறவரின் மக்களின் ஏழு பிரிவுகளில் ஒன்றான செம்பிநாட்டு மறவர் பிரிவைச் சார்ந்தவர்களே சேதுபதியாகச் சேது நாட்டை ஆண்டனர்.

வரலாற்றாசிரியர்கள், இவர்கள் சோழநாட்டிலிருந்து வந்து திருமயம் பகுதிகளில் தங்கினர். பின்னர் இராமநாதபுரம் பகுதிக்கு வந்தனர் என்று கருதுகின்றனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் திருமயம் பகுதியில் விஜயரகுநாத முத்துவயிரிய முத்துராமலிங்க சேதுபதி இருந்துள்ளார். அவரே திருமயம் கோட்டைக்கு அடித்தளமிட்டார் என்று கூறுகின்றனர். இராமேசுவரம் திருக்கோயில் திருச்சுற்றை கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலேயே உடையான் சேதுபதி கட்டினார் என்று எண்ணுகின்றனர். ஆனால் இராமநாதபுரம், இராமேசுவரம் கடற்கரைப் பகுதியைக் காக்கவும் இராமேசுவரம் சென்று வரும் பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், மதுரை நாயக்க மன்னர்களால் கி.பி. 1601-க்கு பிறகு நியமிக்கப்பட்ட உடையான் ரெகுநாத சேதுபதி என்ற சடைக்கதேவருக்குப்(கி.பி. 1601-1623) பின்னரே தெளிவாகச் சேதுபதி வரலாறு கிடைக்கிறது.

சேதுபதி மன்னர்களது அரசினை நிறுவிய பெருமைபடைத்த உடையான் சடைக்கன் சேதுபதி இராமநாதபுரத்திற்கு மேற்கே அமைந்த போகலூர் என்றழைக்கப்பட்ட ஊரினைத் தலைநகரமாகக்

கொண்டு ஆண்டார். இவர்வழி வந்தவர்கள் கி.பி. 1795 வரை இராமநாதபுரம் பகுதியை ஆண்ட தன்னாட்சி மன்னர்களாக விளங்கினர். அதன் பின்னர் ஆங்கிலேயர் வசம் இந்நாடு வந்தது. கி.பி. 1803-இல் சேதுபதிகள் இராமநாதபுரம் ஜமீன்தார் என்ற அந்தஸ்துடன் இந்தியா சுதந்திரம் அடைந்து ஜமீன் ஒழிப்பு வரை (கி.பி. 1948) ஆட்சிப்பொறுப்பில் இருந்துள்ளனர்.

**பெருமைகள்**

பாண்டியர், சோழர்களுக்குப் பின்னர் இராமேசுவரத்தையும் அதனையொட்டிய கடற்கரைப் பகுதிகளையும் பகைவர்களிடமிருந்து காத்துநின்ற பெருமை சேதுபதிகளுக்கு உண்டு. இதனால் "சேதுக்காவலர்கள்" என இவர்களை அழைத்தனர். சேதுபதிகள் இராமேசுவரம் சென்றுவரும் பயணிகளுக்குத் தங்குமிடம், உணவு, பயணவசதி செய்து கொடுத்தனர். வழிப்பறியிலிருந்து அவர்களைக் காத்தனர். இராமேசுவரம் செல்லும் வழியில் வைகையாற்றைக் கடப்பதற்கும், மண்டபம் தோணித்துறைக்கும் பாம்பனுக்கும் இடையிலுள்ள கடலைக் கடப்பதற்கும் இலவசப் படகுவசதி பயணிகளுக்குச் செய்து கொடுத்தனர்.

இராமேசுவரம் கோயிலிலுள்ள பெரும்பாலான கட்டடங்கள் சேதுபதிகளால் உருவானவையே. இராமேசுவரம் கோயிலின் உலகப் புகழ்பெற்ற மூன்றாம் பிரகாரத்தினை உருவாக்கியவர்கள் சேதுபதி மன்னர்களே. திருப்புல்லாணி, உத்திரகோசமங்கை போன்ற பல கோயில்களில் திருப்பணிகள் செய்துள்ளனர். அவற்றிற்கு ஏராளமான அறக்கொடைகளை அளித்துள்ளனர். இராமேசுவரம் செல்லும் சேதுமார்க்கத்தில் பத்து மைல்களுக்கு ஓர் அன்னசத்திரம் அமைத்தனர். பல திருமடங்களைத் தோற்றுவித்தனர். சமயப் பாகுபாடு கருதாது இசுலாமியர், கிறித்தவர், சமணர் ஆகியோரது வழிபாட்டுத் தலங்களுக்கு அறக்கொடைகள் தந்தனர்.

சேதுபதிகள் தமிழ்ப் புலவர்களுக்குப் பேராதரவு தந்து போற்றினர். மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தினைத்

தோற்றுவித்து தமிழையும், தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்து வளர்த்தனர். புலவர்களையும், ஆடல், பாடல் கலைஞர்களையும் தங்கள் அரசவைக்கு அழைத்துப் பெரும் பரிசில்கள் கொடுத்தனர். சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவுக்கு அனுப்பிய பெருமை சேதுபதிக்கே உண்டு. அவரை மீண்டும் பாம்பனில் வரவேற்று இராமலிங்க விலாசத்திற்கு அழைத்துச் சிறப்புச் செய்தவர்களும் சேதுபதிகளே.

**தலைநகர்**

சேதுபதிகளின் முதலாவது தலைநகராகப் புகலூர் என்று வழங்கப்பட்ட போகளூரே இருந்துள்ளது. இராமநாதபுரத்திற்கு மேற்கேயுள்ள சத்திரக்குடிக்கு அருகில் இது உள்ளது. ஆனால் சேதுபதி மன்னர்களில் முதலாவது மன்னரான சடைக்கத்தேவர் (கி.பி. 1601-1623) தொடங்கி சேதுபதி வெளியிட்ட பல செப்பேடுகளில் துகவூர்கூற்றம் என்ற நாட்டுப் பிரிவில் அமைந்த குலோத்துங்கசோழ நல்லூரின் கீழ்ப்பகுதியில் அமைந்த "விரையாதகண்டன்" என்ற ஊரே சேதுபதிகளின் முன்னோரின் இருப்பிடமாகக் கூறப்படுகிறது. இவ்வூர் இளையாங்குடிக்கு அருகிலுள்ள சாலைக்கிராமம் பகுதியில் இருந்திருக்கிறது. ரெகுநாத கிழவன்சேதுபதி (கி.பி. 1679-1710) காலத்திலிருந்து இன்றைய இராமநாதபுரம் சேதுபதிகளின் தலைநகரமாக மாறியது.

**இராமநாதபுரம் கோட்டை**

சேதுபதிகளின் தலைநகரமாக இராமநாதபுரம் மாறுவதற்கு முன்பு மண்ணாலான சிறிய கோட்டைக்குள் இந்நகரம் இருந்தது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து இது பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. அதற்கு முன்பு போகளூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட சேதுபதிகள் இதனை பயன்படுத்தியுள்ளனர். இம்மண்கோட்டைக்குள் இருந்த கூரிச்சாத்தனார் கோயிலைக் கூத்தன் சேதுபதி கட்டினார். சொக்கநாதர் கோயிலைத் தளவாய்

சேதுபதி உருவாக்கினார். இராஜராஜேஸ்வரி கோயில் திருமலை ரெகுநாத சேதுபதியால் கட்டப்பட்டது. இக்கோட்டைக்குள் மன்னர் தங்கும் இடமும் இருந்தது.

கி.பி. 1678-க்குப் பிறகு சேதுபதிகளின் தலைநகரமாக இராமநாதபுரத்தைக் கிழவன் சேதுபதி மாற்றினார். மண்கோட்டையைச் செவ்வக வடிவில் அமைந்த கற்கோட்டையாக்கினார். கிழக்கே ஒரேயொரு தலைவாயிலுடன் 27அடி உயரமும் ஐந்தடி அகலமுடைய சுவருடன் இரண்டு மைல் சுற்றளவு கொண்டதாக இது உருவாக்கப்பட்டது. இதனைச் சுற்றி ஆழமான அகழி ஒன்று அமைக்கப்பட்டது.

இக்கோட்டையைப் பகைவரிடமிருந்து பாதுகாப்பதற்கு 42 கொத்தளங்கள் கோட்டையைச் சுவரைச் சுற்றி அமைக்கப் பட்டிருந்தன. அவற்றின் மீது கி.பி. 1770-இல் நாற்பத்து நான்கு பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்ததாக ஆங்கிலேயர் ஆவணம் கூறுகிறது. ஆங்கில தளபதி ஜோசப் ஸ்மித், ஜெனரல் பேட்டர்சன் ஆகியோரின் குறிப்புகளில் இக்கோட்டையின் சிறப்பு பற்றி விரிவான விளக்கம் உள்ளது. இராமநாதபுரம் கோட்டையின் சுவரும் கொத்தளங்களும் கி.பி. 1803-1804-ல் ஆங்கில ஆட்சியரின் ஆணைப்படி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. இன்று இராமநாதபுரத்தில் கோட்டை இருந்தமைக்கு அடையாளமாக நகரின் தென்மேற்கே மூலைக் கொத்தளம் என்று அழைக்கப்படும் கொத்தளம் ஒன்று மட்டும் எஞ்சி நிற்கிறது. இதில் ஒன்பது பீரங்கிகள் வைப்பதற்கான அமைப்பு உள்ளது.

## இராமலிங்க விலாசம் - அரண்மனை

இராமநாதபுரம் கோட்டைக்குள் சேதுபதிகள் அமர்ந்து ஆட்சிபுரிந்த ஆட்சிப்பீடமே இராமலிங்க விலாசம் என்ற பெயரில் இன்று விளங்கிவருகிறது. இராமேசுவரம் இராமநாதசுவாமி மீது அளவில்லாத பக்தியைக் கொண்டவர்கள் சேதுபதிகள்.

அப்பெருமானைக் குலதெய்வம் போலப் போற்றி வழிபட்டனர். இராமேசுவரம் கோயிலைக் கண்போல் காத்த பெருமையும் சேதுபதிகளுக்கு உண்டு. இராமேசுவரம் ஈசனின் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடாக தமது அரண்மனைக்கு "இராமலிங்க விலாசம்" என்று பெயரிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இத்துணையளவு ஓவியங்கள் நிறைந்த அழகுமிக்க அரண்மனை வேறு எங்கும் இல்லை. மேற்கிலிருந்து கிழக்காக கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்று கோயில் போன்ற அமைப்பில் மூன்று மண்டபங்களை அடுத்தடுத்து கொண்டதாகக் காட்சியளிக்கிறது. கிழக்கு மேற்காக 153 அடி நீளமும் வடக்குத் தெற்காக 65 அடி அகலமும் கொண்ட செவ்வக வடிவில் 14 அடி உயரமான மேடையின் மீது இது அமைந்துள்ளது. கி.பி. 1690-1710-க்கும் இடையில் கிழவன் சேதுபதி காலத்தில் கட்டப்பட்டது. சுண்ணாம்பு, செங்கல், கருங்கல் கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

கிழக்கு நோக்கிய இராமலிங்க விலாசத்தின் உள்ளே ஏறிச் செல்லுவதற்கு 16 நீண்ட படிகளைக் கடந்து செல்ல வேண்டும். இதன் இருபுறமும் கல்லாலான யாளிகள் காணப்படுகின்றன. படிக்கட்டுகளைக் கடந்து உள்ளே நுழைந்தால் வட்டமான உயரமிக்க ஐம்பது தூண்களைக் கொண்ட மகாமண்டபம் உள்ளது. தூண்களின் மேற்புறங்களை அரைவட்ட வளைவுகள் இணைக்கின்றன. தூண்களும் வளைவுகளும் திருமலை நாயக்கர் அரண்மனைக் கட்டடக் கலையை நினைவூட்டுகின்றன. மகாமண்டபத்தின் தென்மேற்கு மூலையில் சேதுபதிகளின் அபிசேகமேடை உள்ளது. மகாமண்டபத்தினைக் கடந்து சென்றால் கருங்கல்லாலான இருபது தூண்கள் தாங்கும் அர்த்த மண்டபத்தினை அடையலாம். அர்த்த மண்டபத்திற்கு மேற்கே சிறிய வாயிலையுடைய கருவறை போன்ற அறையுள்ளது. இதனை 12 கற்தூண்கள் தாங்குகின்றன. இராமர் பீடம் என இதனை அழைக்கின்றனர். இராமர் பீடத்தினைப் போன்றே அதற்கு மேலே கருங்கல் தூண்கள் தாங்கும் அறை ஒன்று உள்ளது.

இதற்கு இராமர் பீடத்திலிருந்து செல்வதற்குப் படிக்கட்டுகள் வடகிழக்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலேயுள்ள அறைக்குக் கிழக்கே பெரிய திறந்தவெளியாலான முற்றம் உள்ளது. இராமலிங்க விலாசத்தில் இரண்டாவது மாடியின் உச்சியில் மாலை வேளையில் அரச சுற்றத்தினர் அமர்ந்து ஓய்வு எடுப்பதற்கு இருக்கை ஒன்று இருக்கிறது. இங்கிருந்து அரண்மனையின் அனைத்துப் பகுதி களையும் காணலாம். இவ்வரண்மனையில்தான் கி.பி. 1798-இல் ஜாக்ஸன் என்ற ஆங்கில தளபதி வீரபாண்டிய கட்டபொம்மனைப் பேட்டி கண்டார்.

இராமலிங்க விலாசத்தின் சுவர்களிலும் மேல்விதானங்களிலும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தினைச் சார்ந்த வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை சேதுபதிகளின் அகவாழ்வையும் புறவாழ்வையும் ஆன்மீக வாழ்வையும் சித்தரிக்கின்றன. வரலாற்றுச் சிறப்பும் கலைச் சிறப்பும் வாய்ந்த இராமலிங்க விலாசத்தினைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் கி.பி.1978 முதல் தொல்லியல் சின்னமாகப் பாதுகாத்து வருகின்றனர். இதனைப் பெருங்கருணை உள்ளத்தோடு தொல்லியல் துறைக்கு அளித்தவர் மாட்சிமை தங்கிய இராஜா இராமநாத சேதுபதி ஆவார்.

## வண்ணவோவியங்கள்

இராமலிங்க விலாசத்திலுள்ள வண்ணவோவியங்கள் சேதுபதிகளின் வாழ்வையும் வரலாற்றையும் விளக்கும் வரலாற்றுக் கருவூலம். இவை ஆன்மீகத்தின் மீது சேதுபதிகள் கொண்ட பற்றைக் காட்டுகின்றன. சேதுபதி காலத்து நாகரிகத்தையும் பண்பாட்டையும் புரிந்துகொள்ள துணை செய்யும் அரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

சேதுபதிகளின் அரசியல் வாழ்வை விளக்கும் காட்சிகள், அன்றாட வாழ்வில் அவர்களது நடைமுறைகள், பொழுதுபோக்குகள், அவர்களது அகவாழ்வைச் சித்தரிக்கும் சுவையான காட்சிகள், இராமாயண, பாகவதக் காட்சிகள், தமிழகத்தின் முக்கியமான சமயத்தலங்கள் ஆகியவை இராமலிங்கவிலாச ஓவியங்களில் இடம்பெற்றுள்ளன.

இவ்வோவியங்கள் அனைத்தும் முத்துவிஜயரெகுநாத சேதுபதி காலத்தில் (கி.பி. 1713-1725) தீட்டப்பெற்றவை. இவரே இவ்வோவியங்களில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளார்.

இராமலிங்க விலாசத்தில் நுழைந்தவுடன் காணப்படும் மகாமண்டபத்தின் தென்பகுதிச் சுவர்களில் சேதுபதி தஞ்சை மன்னரோடு புரிந்த போர், முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் பவனி, அயல்நாட்டினரைச் சந்தித்தல் போன்ற ஓவியங்கள் காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் மற்ற பகுதிகளில் தமிழகத்திலுள்ள முக்கியமான இறைத்தலங்களும் இறைவனது உருவங்களும் இடம்பெற்றுள்ளன.

மகாமண்டபத்தினை அடுத்துள்ள அர்த்தமண்டபச் சுவர்களில் கிருஷ்ணனின் பிறப்பை விளக்கும் காட்சிகள், ஆயர்பாடியில் கிருஷ்ணன் புரிந்த வீரச் செயல்கள், கிருஷ்ணனின் பட்டாபிசேகம் போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

அர்த்தமண்டபத்தினை அடுத்துள்ள இராமர்பீடம் எனப்பட்ட கருவறை மண்டபத்தின் சுவர்களில் இராமபிரானின் பிறப்பு தொடங்கி சீதையை மணம் முடிக்கும் வரையிலான இராமாயணக் காட்சிகள் ஒன்றையடுத்து ஒன்றாக இடம்பெற்றுள்ளன. இராமாயண, பாகவத காட்சிகளின் அடியில் பெரும்பாலும் தமிழிலும் சில இடங்களில் தெலுங்கிலும் காட்சிகள் பற்றிய விளக்கம் அக்கால பேச்சுமொழியில் எழுத்தப்பட்டுள்ளன. இராமர் பீடத்தின் மேல் விதானங்களின் வில்வளைவுகளில் இராணி தொடர்பான அந்தப்புரக் காட்சிகள், சேதுபதி இராஜராஜேஸ்வரியிடம் செங்கோல் வாங்குதல், இராமாயணம் படித்தல், மதுரை நாயக்க மன்னரான முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர் முத்துவிசய ரெகுநாத சேதுபதிக்கு இரத்தினப் பட்டாபிசேகம் செய்தல், சேதுபதியின் பவனி, எண்திசைக் காவலர்கள் உருவங்கள் போன்ற அரிய காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

மாடியிலுள்ள அறைச் சுவர்களில் சேதுபதி இசை கேட்டல், நடனம் காணுதல், தனது அன்பான தேவியரோடு அவர் கூடி மகிழும் அகவாழ்வுக் காட்சிகள் சிறப்பான முறையில் வண்ணவோவியமாக வரையப்பட்டுள்ளன.

## ஓவியங்களின் காலம்

இராமலிங்க விலாசத்தில் காணும் ஓவியங்களின் காலம் பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளன. இவற்றை மிகவும் பிற்பட்ட காலத்தினைச் சார்ந்தது எனக் கருதினர். இவ்வோவியங்களில் அவற்றின் காலத்தினை அறிய இரண்டு முக்கிய குறிப்புகள் உள்ளன. இவ்வோவியங்கள் அனைத்திலும் கி.பி. 1706-லிருந்து 1730 வரை ஆட்சிபுரிந்த முத்துவிசய ரகுநாத சேதுபதியின் உருவங்களே திரும்பத் திரும்ப இடம்பெற்றுள்ளன. இவரது சமகாலத்தவராக மதுரையில் ஆட்சிபுரிந்த முத்தவிஜயரங்க சொக்கநாத நாயக்கர், முத்துவிஜய ரகுநாத சேதுபதிக்கு இரத்தின பட்டாபிசேகம் செய்யும் காட்சி ஒன்று இராமர்பீடம் விதானத்தில் காணப்படுகிறது. இதனடியில் முத்துவிஜய ரகுநாத சேதுபதிக்கு விஜயரங்க சொக்கநாத நாயக்கர் அய்யன் இரத்தினப் பட்டாபிசேகம் செய்கிறது. ("ராச ஸ்ரீவிசயரங்க சொக்கனாத நாயக்கர் . . . . . . . . விசைய ரகுனாதச் சேதுபதி அவர்களுக்கு ரத்ந பட்டாபிசேகம்") என்று எழுதப்பட்டுள்ளது. முத்துவிசைய ரகுநாத சேதுபதி கி.பி. 1700க்கும் 1710க்கும் இடையில் தஞ்சை மராட்டியரோடு போரிட்ட காட்சி முன்மண்டப தென்பகுதியில் கிழக்குச் சுவரில் விரிவாக இடம்பெற்றுள்ளது. எனவே இவ்வோவியங்கள் அனைத்தும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தீட்டப்பெற்றிருக்க வேண்டும் எனலாம்.

## ஆன்மீக ஓவியங்கள் - தசாவதாரம்

முன்மண்டபத்தின் தென்பகுதி, மேல்பகுதி, வடபகுதிச் சுவர்களில் சேதுபதியின் பக்தியைப் புலப்படுத்தும் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சைவ, வைணவத் தலங்களின் தோற்றங்கள் ஓவியங்களில் இடம்பெற்றுள்ளன.

முன்மண்டப வடசுவரில் திருமாலின் தசாவதாராக் காட்சிகள் பெரிய அளவில் வரிசையாக வரையப்பட்டுள்ளன. இராமர்பீட விதானங்களில் பல்வேறு நிதிகளின் (செல்வங்கள்) ஓவியங்கள்

மற்றும் அயிராவதம், சிந்தாமணி, பத்ரபீடம், கற்பக மரம், காமதேனு, வாகனங்களோடும் கூடிய எண்திசை காவலர் உருவங்கள் இடம்பெற்றுள்ளன.

## புறவாழ்வு ஓவியங்கள்

இராமலிங்க விலாசத்தின் முன்மண்டபத்து தென்பகுதி சுவரில் மராட்டியர்க்கும் சேதுபதிக்கும் நடந்த போர்க்காட்சிகள் அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பீரங்கிகள், துப்பாக்கிகள் இடம்பெற்றுள்ளன. சேதுபதியும் மராட்டிய அரசரும் தத்தம் படையுடன் அணிவகுத்துக் கடுமையாகப் போர்புரிகின்றனர். பீரங்கிகள் ஒவ்வொன்றிலும் அவற்றின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன.

முன்மண்டபத்தின் தென்சுவரில் போர்க்காட்சியை அடுத்து சேதுபதி அவரது தேவியரோடு கொலுவீற்றிருக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. சேதுபதியை வெளிநாட்டவர் பலர் வந்து சந்திக்கும் காட்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இராமர் பீடப்பகுதியில் விதானத்தில் சேதுபதியின் அகவாழ்வையும் விளக்கும் காட்சிகளும் உள்ளன. இவற்றில் சேதுபதி பல்வேறு கோலங்களில் அழகுற கொலுவீற்றிருக்கும் காட்சிகள், பல்லக்கில் பவனி வரும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்க காட்சி ஒன்று இராஜராஜேஸ்வரியிடமிருந்து சேதுபதி செங்கோல் வாங்கும் காட்சியாகும். திருமாலிடமிருந்து சேதுபதி அருளைப்பெறும் காட்சியும் இங்குள்ளது.

சேதுபதி வயதான ஒருவர் முன்னர் அமர்ந்து பக்தியுடன் இராமாயணம் கேட்கும் காட்சியும் இராமர் பீடம் பகுதியில் உள்ளது. இவ்வோவியத்தில் சேதுபதிக்கு முன் உள்ள இராமாயண ஓலைச் சுவடியில் “ஸ்ரீராமநிவேகதி” என்று எழுதப்பட்டுள்ளது. வயதானவர் கையில் உள்ள ஓலைச் சுவடியில், “ஸ்ரீராமஜெயம்” என்று எழுதப் பட்டுள்ளது. இராமர்பீட விதான ஓவியங்களில் பல்வேறு அலங்காரங் களுடன் சேதுபதி காட்சியளிக்கின்றார். ஐரோப்பியர் ஒருவர் சேதுபதிக்கு வணங்கி பரிசளிக்கும் காட்சி இதில் இடம்பெற்றுள்ளது.

## அகவாழ்வு ஓவியங்கள்

இராமர்பீடத்திலும் அதற்கு மேல்புற மாடியிலும் சேதுபதியின் அகவாழ்வை விளக்கும் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. இராமர்பீடப் பகுதியில் சேதுபதியும் இராணியும் மன்மதன் இரதியாய் காட்சியளித்தல், தேவியுடன் நடைபெற்ற அந்தப்புர நிகழ்வுகள் பல காட்சிகளாக உள்ளன.

மேற்புற மாடியில் சேதுபதியும் அவரது இராணியும் பல்வேறு நிலையில் அகவின்பத்தை துய்க்கும் காட்சிகள் ஓவியமாக பெரிய அளவில் சுவரில் வரையப்பட்டுள்ளன. இதில் சேதுபதி தேவியர் குழாத்தோடு நீராடுதல், பெண்களுடனும் தேவியரோடும் கைகோர்த்து ஆடுதல், கிளியைப் போலவும். அன்னத்தைப் போலவும், யானையைப் போலவும், குதிரையைப் போலவும் பெண்கள் ஒன்று திரண்டு அமைய அவற்றின் மீது சேதுபதியும் இராணியும் மன்மதன் போலவும், இரதியைப் போலவும் மலர்கணைகளுடன் காட்சியளிக்கின்றனர். பல்வேறு வடிவங்கள் கொண்ட மதுக் குடுவைகளின் நடுவே சேதுபதியும் இராணியும் வீற்றிருக்கின்றனர். சேதுபதி தனது தேவியோடு இருக்கும் பள்ளியறைக் காட்சிகள், வேட்டைக் காட்சிகள் இங்குள்ள ஓவியங்களில் இடம்பெற்றுள்ளன.

மாடியறை ஓவியங்களில் சேதுபதி ஓய்வு நேரங்களில் ஆடல், பாடல் கேட்டும் கண்டும் மகிழும் காட்சிகள் அழகுறக் காட்டப் பட்டுள்ளன. இங்கு கண்ணாடி முன்னர் தன் அழகைக் காணும் ஆடல் மகளின் உருவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

## இராமாயண ஓவியங்கள்

இன்று இராமர்பீடம் என்று அழைக்கப்படும் அகமண்டபப் பகுதியின் சுவர்களில் இராமாயணக் கதை தொடர்ச்சியாக வரையப்பட்டிருக்கிறது.

பாலகாண்டத்தில் இராமாயணத்தை வால்மீகி எழுதக் காரணமான கிரௌஞ்சவதம் தொடங்கி, இராமன், இலட்சுமணன்,

பரதன், சத்ருகன் ஆகியோரது திருமணத்தோடு முடியவுள்ள முக்கிய காட்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் கிரௌஞ்ச பறவையைக் கொன்ற வேடனை வால்மீகி சபித்தது, பிரமதேவன் சொன்னபடி இராமர் கதையை வால்மீகி இயற்றியது, லவகுசலர்களுக்கு இராமகதை சொன்னது முதலிய காட்சிகள் முதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அடுத்து தசரதன் கலைக்கோட்டு முனிவரை அழைத்து வரச்செய்து, புத்திரகாமேஷ்டி யாகம் செய்தது, யாகத்திலிருந்து அக்கினிதேவன் மூலம் கிடைத்த பிண்டத்தை உண்ட தசரதன் தேவியர்க்குக் குழந்தைகள் பிறந்தது, குழந்தைகளுக்குக் காதுகுத்தி கொண்டையிட்டது. சிலம்பம், வில்வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம், ரதயேற்றம் போன்ற பல்வகை வித்தைகளை இராமன், இலட்சுமணன் முதலியோர் கற்றது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

தொடர்ந்து விசுவாமித்திரர் இராமன், இலட்சுமணரை தாம் செய்யும் யாகத்தைக் காக்க அழைத்துச் சென்றது, யாகத்தை அழிக்க வந்த அசுரர்களோடு தாடகை என்ற அரக்கியையும் வதம் செய்தது, விசுவாமித்திரர் இராமர், இலட்சுமணரை மிதிலைக்கு அழைத்துச் செல்லும் வழியில் கல்லாய் கிடந்த அகலிகை இராமர் கால்பட்டு பாபவிமோச்சனம் பெற்றது, மிதிலைக்கு இராமன் சென்று வில் ஒடித்து சீதையை மணம் முடித்தது போன்ற காட்சியோடு இராமாயண ஓவியம் நிறைவடைந்துள்ளது.

**பாகவத ஓவியங்கள்**

இராமலிங்க விலாசத்தின் முன்மண்டபத்தினை அடுத்துள்ள மகாமண்டபத்திலும், அதனையொட்டியுள்ள முன்மண்டபத்தின் வடக்குப் பகுதியிலும் உள்ள சுவர்களில் கிருஷ்ணனின் வாழ்வை விளக்கும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. கிருஷ்ணன் தேவகி வயிற்றில் பிறப்பான் எனக் கருதி கம்சன் அவள் வயிற்றில் பிறந்த குழந்தைகளை ஒவ்வொன்றாக கொல்லும் காட்சிகள், வசுதேவன்

தனக்குப் பிறந்த கிருஷ்ணனை ஆயர்பாடிக்கு எடுத்துச் சென்று அங்கு வைத்துவிட்டு, யாசோதைக்குப் பிறந்த துர்க்கையை எடுத்துக் கொண்டு திரும்புதல், கம்சன் துர்க்கையைக் கொல்ல முயலும்போது அவனிட மிருந்து தப்பி கிருஷ்ணன் ஆயர்பாடியில் வளருகின்றான் என்று சொல்லி மறைந்தது போன்ற காட்சிகள் முதலில் இடம்பெற்றுள்ளன.

அடுத்து ஆயர்பாடியில் நந்தகோபன் தானம் செய்தது, ஆயர் பாடியில் வளரும் கிருஷ்ணனைக் கொல்ல கம்சன் பல முயற்சிகள் செய்தது ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவற்றில் கிருஷ்ணன், பேச்சி(பூதகி) என்ற அரக்கி மார்பில் நஞ்சு தடவி பாலுட்ட வந்தபோது, அவளைக் கொன்றது, தன்னை ஆகாயத்தில் எடுத்துச் சென்ற அரக்கனை அழித்தது, மருதமரம் வில்வமரமாய் நின்ற மது, கைடபரை அழித்தது, அவர்களுக்குச் சாபம் தீர்த்தது, விளாமரம், கொக்கு வடிவமாய் வந்த அரக்கர்கள் மற்றும் பாம்பு வடிவாய் வந்த சற்பாசுரன் முதலியோரை அழித்த காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இவற்றோடு கண்ணன் குழந்தை வடிவாய் இருந்தபோது ஆயர்பாடியில் நடத்திய குழந்தைக் குறும்புகள் இடம்பெற்றுள்ளன. தனது தோழர்களோடு ஆயர்மகளிர் சேர்த்து வைத்த தயிரையும், வெண்ணையும் கண்ணன் கவரும் காட்சிகள் அழகிய முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து கண்ணனின் புல்லாங்குழல் ஓசையைக் கேட்டு மயங்கிய ஆயர்பாடிக் காட்சி, யமுனை ஆற்றங்கரையில் குளித்துக் கொண்டிருந்த பெண்களின் ஆடையைக் கண்ணன் கவர்ந்த காட்சி, தெய்வேந்திரனுக்கு ஆயர்பாடியில் இருந்தவர்கள் படைத்த உணவை கண்ணன் மாயமாய் மலைக்குள்ளிருந்து உண்ட காட்சி இடம் பெற்றுள்ளன. கோபம் கொண்ட இந்திரன் அடைமழை பெய்வித்து ஆயர்பாடியை அழிக்க முற்பட்டபோது கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாய் பிடித்து ஆயர்பாடியைக் காத்த காட்சியும், இந்திரன் கிருஷ்ணன் அவதாரத்தை அறிந்த காட்சியும், கிருஷ்ணனுக்கு அனைவரும் சேர்ந்து பட்டாபிசேகம் செய்த காட்சியும் பாகவத ஓவியத்தின் இறுதியில் இடம்பெற்றுள்ளன.

## ஓவியக் குறிப்புகள்

இராமாயண பாகவத ஓவியங்களின் அடியில் அவற்றை பற்றிய விளக்கக் குறிப்புகள் மக்கள் பேச்சு வழக்கில் தமிழில் எழுதப் பெற்றுள்ளன. இவை ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டது போல குறில் நெடில் பாகுபாடின்றி குறிலாக மட்டும் எழுதப்பட்டுள்ளன. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி இடம்பெறவில்லை. அக்கால மறவர் நாட்டின் பேச்சுமொழியை அறிந்துகொள்ள இவ்வோவியக் குறிப்புகள் சிறந்த சான்றாய் உள்ளன.

## ஓவியங்களின் பண்பு

சேதுபதி அரண்மனையில் வரையப்பட்ட ஓவியங்களில் தெலுங்கு மற்றும் மொகலாய ஓவியப் பண்புகள் காணப்படுகின்றன. மொகலாயரைப் போல உள்ளாடைகள் தெரிய மெல்லிய ஆடைகளை ஆண்களும், பெண்களும் இங்குள்ள ஓவியங்களில் அணிந்து காட்சியளிக்கின்றனர். மொகலாயரைப் போன்று தலைப்பாகையினை இவர்கள் அணிந்துள்ளனர். தெலுங்கு நாட்டுப் பண்பு ஒவ்வொரு ஓவியக் காட்சியிலும் ஊடுருவிக் காணப்படுகின்றது. தெலுங்கு நாட்டு ஓவியம் மற்றும் சிற்பங்களில் காணப்படுவது போல் இங்குள்ள ஓவிய மாந்தர் ஆடைகள் அணிந்து கொண்டையிட்டிருக்கின்றனர். ஓவியங்களின் அடிக்குறிப்புகள் சில தெலுங்கு எழுத்துக்களில் தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. ஓவியங்கள் பளிச்சிடும் வண்ணத்தில் உள்ளன. ஆண், பெண் உருவங்கள் சதைப்பிடிப்புடன், பருமனாகப் பக்கவாட்டில் நிற்பதுபோல் வரையப்பட்டுள்ளன. பெண்கள் அணியும் ஆடைகள் மிகுந்த வேலைபாடுகளுடன் பல்வேறு வகையும் வண்ணமும் கொண்டதாய் காண்பவர் கண்ணைக் கவரும் முறையில் உள்ளன. பிற நாட்டுக் கலாச்சாரப் பண்புகள் மறவர் நாட்டு ஓவியங்களில் எத்துணையளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிய இராமலிங்க விலாச ஓவியங்கள் சிறந்த ஓவிய வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றன.

# தொல்லியல் அருங்காட்சியகம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சேதுபதிகளின் சிறப்பையும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தொல்லியல் வரலாற்றையும் வெளிப்படுத்தும் முறையில் இராமலிங்க விலாசம் அரண்மனையில் அருங்காட்சியகம் ஒன்றை அமைத்துள்ளது. இதில் சேதுபதி ஓவியங்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள், காசுகள் இடம் பெற்றுள்ளன. சென்ற நூற்றாண்டில் மறவர் நாட்டில் பயன்படுத்திய ஆயுதங்கள் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் கிடைத்த அரிய சிற்பங்கள், தொல்லியல் எச்சங்கள், கலைப் பொருட்கள் இக்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## ஓவியங்கள்

இருபதாம் நூற்றாண்டில் இராமநாதபுரம் அரண்மனையிலிருந்து ஆட்சிபுரிந்த முத்துராமலிங்க சேதுபதி, பாஸ்கர சேதுபதி ஆகியோரின் வண்ணப்படங்கள், இக்காட்சியகத்தில் உள்ளன. இவை அம்மன்னர்களின் காலத்தில் இருந்த ஓவியர்களால் வரையப்பட்டவை. இவற்றோடு இப்பகுதி பாளையக்காரர், சிவகங்கை அரசர் ஆகியோரது வண்ண உருவப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

## செப்பேடு

இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகள், சிவகங்கை மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகள், இக்காட்சியகத்தில் உள்ளன. தென்தமிழ்நாட்டில் அதிக அளவு செப்பேடுகளைக் கொண்ட அருங்காட்சியகம் இதுவாகும். இவை பார்வையாளர்கள் கண்டுகளிக்கும் வகையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. இவை செவ்வக வடிவிலும் சதுர வடிவிலும் அமைந்த

செப்புத் தகடுகளாகும். இவற்றில் நேர்த்தியான முறையில் தமிழில் ஆவணங்களை எழுதியுள்ளனர்.

### கல்வெட்டுகள்

இராமநாதபுரம் சேதுபதி செய்த சமூக, சமயத் தொண்டினை விளக்கும் வகையில் சேதுபதி மன்னர்களின் கல்வெட்டுப்படிகள் காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. ஆங்கிலேய ஆட்சியராக இருந்து தமிழுக்கு அருந்தொண்டாற்றி பல அரிய சமுதாயப் பணிகளைச் செய்த எல்லீசுதுரை இராமநாதபுரத்தில் தங்கியிருந்தபோது காலமானார். தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள அவரது கல்லறைக் கல்வெட்டுகளும் இராமலிங்க விலாச அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன.

### காசுகள்

சேதுபதி மன்னர்கள் வெளியிட்ட செப்புக் காசுகள் இக்காட்சி யகத்தில் உள்ளன. இவற்றோடு இப்பகுதியில் கிடைத்த பிற்காலப் பாண்டியர், நாயக்கர், ஆங்கிலேயர் காசுகளும் உள்ளன.

### ஓலைச் சுவடிகள்

இப்பகுதியில் கிடைத்த புராணம், வைத்தியம். இலக்கியம் தொடர்பான ஓலை ஆவணங்களும் காட்சியகத்தில் உள்ளன.

### ஆயுதங்கள்

சென்ற நூற்றாண்டில் மறவர் நாட்டின் படைவீரர் பயன்படுத்திய துப்பாக்கிகள், ஈட்டிகள், போர்வாள்கள், குறுவாள்கள், குத்தீட்டிகள், வேல்கம்புகள், வளரிகள் இக்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன. இவற்றில் காண்பவர் கண்ணை ஈர்க்கும் வகையில் வேலைப்பாடு மிக்க முனைகளைக் கொண்ட குத்தீட்டிகள், வேல்கம்புகள் உள்ளன. இங்குள்ள பிடியுடனும் அழகான உறையுடனும் கூடிய கூரிய போர்வாள்கள் அக்கால மக்களின் வீரத்தினைப் பறைசாற்றும்.

வளரி என்ற ஆயுதம் எதிரியை வீழ்த்திவிட்டு விசியவர் கைக்கே திரும்பக் கூடியது. இது உலகில் பழங்குடியினரால் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவ்வகை ஆயுதங்களை இராமநாதபுரம் மறவர் படையினர் அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர். இவ்வகை ஆயுதங்கள் பல காட்சியகத்தில் உள்ளன.

## சிற்பங்கள்

இக்காட்சியகத்தில் முற்காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர், விசயநகர வேந்தர், நாயக்கர், சேதுபதிகள், ஆங்கிலேயர் காலத்தினைச் சார்ந்த அரிய கற்சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் பழமையானது நத்தம்பட்டியிலிருந்து எடுத்துவரப்பட்ட கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த திருமால் சிற்பமாகும். இவ்வுருவம் மேலிரு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தி நின்ற நிலையில் காட்சியளிக்கிறது. இதேபோன்று கம்பீரமாக நின்ற நிலையில் காட்சியளிக்கும் கண்ணங்குடியிலிருந்து எடுத்துவரப்பட்ட திருமால் சிற்பமும் சிற்பப் பிரிவில் உள்ளது.

இராமநாதபுரம் பகுதியில் சமண சமயமும் சிறப்புற்று விளங்கியது என்பதை எடுத்துக்காட்டும் முறையில் சில சிற்பங்கள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அர்த்தபரியங்காசனத்தில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கும் தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்று இங்கு உள்ளது. இது நத்தம்பட்டியிலிருந்து எடுத்துவரப்பட்ட கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு பாண்டியர்காலச் சிற்பமாகும். மகிபாலன் பட்டியிலிருந்து எடுத்துவரப்பட்ட சமண சமய இயக்கர், அடியார் உருவங்களும் இக்காட்சியகத்தில் உள்ளன. இவை தவிர அண்ணாசாமி சேதுபதி, முத்துராலிங்க சேதுபதி ஆகியோரது கற்சிற்பங்கள் உள்ளன.

## பிறபொருட்கள்

இராமநாதபுரம் பகுதியிலிருந்த அரசமரபினர் மற்றும் மக்கள் பயன்படுத்திய அரிய கலைப்பொருட்கள் இவ்வருங்காட்சியகத்தில் சேரித்து வைக்கப்பட்டுள்ளன. சிவகங்கை அரசர் பயன்படுத்திய

சிம்மாசனம் இவற்றில் குறிப்பிடத்தக்கது. இவை தவிர விளக்குகள், இசைக் கருவிகள், இளவட்டக்கல் ஆகியவையும் இங்குள்ளன.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தினைச் சார்ந்த கற்கருவிகள், பெருங்கற்காலத்தினை சார்ந்த முதுமக்கள் தாழி, காட்சியகத்தில் உள்ளன. வைகை ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த அழகன்குளம் என்ற இடத்தில் செய்யப்பட்ட அகழாய்வில் கிடைத்த அரிய ரோமானியர் தொடர்புடைய மண்பாண்டங்கள், வண்ண மணிகள், ஓடுகள் போன்றவை இக்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இராமலிங்க விலாச அரண்மனையும் அருங்காட்சியகமும் பொதுமக்கள் பார்வைக்காக ஒவ்வொரு நாளும் காலை ஒன்பது மணி முதல் ஐந்து மணி வரை திறந்திருக்கும். அரசின் குறிப்பிட்ட விடுமுறை தினங்கள் தவிர பிற நாட்களில் இவ்வரண்மனையை அனைவரும் கண்டு மகிழலாம்.

# சேதுபதி மன்னர்கள்

உடையான் சேதுபதி என்ற சடைக்கன்
(கி.பி. 1601-1623)
↓
கூத்தன் சேதுபதி (1623-1635)
↓
தளவாய் ரகுநாத சேதுபதி (1635-1645)
↓
திருமலை ரெகுநாத சேதுபதி (1646-1676)
↓
இராஜசூரிய சேதுபதி (1676)
↓
அதான் ரகுநாத சேதுபதி (1677)
↓
இரகுநாத கிழவன் சேதுபதி (1678-1710)
↓
முத்துவைரவநாத சேதுபதி (1710-1712)
↓
முத்துவிஜயரகுநாத சேதுபதி (1713-1725)
↓
சுந்தரேச சேதுபதி (1725)
↓
பவானி சங்கர் சேதுபதி (1725-1727)
↓
குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி (1728-1735)
↓

சிவகுமார முத்து விஜயரகுநாத சேதுபதி (1735-1747)

↓

இராக்கத் தேவர் சேதுபதி (1748)

↓

செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி (1749-1762)

↓

முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி (1762-1772, 1781-1795)

# இராமநாதபுரம் ஜமீன்தார்கள்

இராணி மங்களேஸ்வரி நாச்சியார் (கி.பி. 1803-1812)

↓

அண்ணாசாமி சேதுபதி (1812-1815)

↓

விஜயரகுநாத இராமசாமி சேதுபதி (1816-1830)

↓

இராணி முத்துவீராயி நாச்சியார் (கி.பி. 1830-1841)

↓

பர்வதவர்த்தனி நாச்சியார்

↓

துரைராஜா (எ) முத்துராமலிங்க சேதுபதி (1841-1873)

↓

இராஜா பாஸ்கர சேதுபதி (1888-1903)

↓

இராஜஇராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி (1910-1928)

↓

சண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி (1928-1948)

# சேதுபதிகளின் சிறப்புப் பெயர்கள்

சேதுக் காவலன்

சேதுமூலரட்சாதுரந்தரன்

தனுஷ்கோடிக் காவலன்

திருவணைக் காவலன்

வைகை வளநாடன்

தேவை நகராதிபன்

இராமநாதசுவாமி காரியதுரந்தரன்

தொண்டியந்துறைக் காவலன்

செம்பி வளநாடன்

ரவிகுலசேகரன்

செங்காவிக் குடையான்

பரராசகேச சிங்கம்

வீரவெண்பாமாலை

கொட்டமடக்கி

சொரிமுத்து வன்னியன்

வன்னியராட்டந் தவிர்த்தான்

மதுரை ராயன்

மதுரை மானங்காத்தான்

இளஞ்சிங்கம்

தளசிங்கம்

மதபுலி

தாலிக்கு வேலி

அடைக்கலங் காத்தான்

வேதியர் காவலன்

இரணியகருப்பயாஜி

சிவபூசாதுரந்தரன்

சுப்பிரமணிய பாதாரவிந்த சேவிதன்

ஆத்தில்பாச்சி

கடலில்பாச்சி

சங்கீத வித்தியா சாகீத்திய விநோதன்

பரத நாடக பிறவீணன்

**சேதுபதி கல்வெட்டுகள்**

செப்பேடுகள் கிடைத்த அளவிற்குச் சேதுபதிகளின் கல்வெட்டுகள் கண்டறியப்படவில்லை. இதுவரை நாற்பது கல்வெட்டுகளே கிடைத்துள்ளன. இராமநாதபுரம், இராமேசுவரம், இதம்பாடல். போகலூர், கீழக்கரை, முதலூர், நயினார்கோவில், ஆலம்பட்டி, திருவாடனை, கண்ணாராங்குடி, பெருங்கரை, பெருவயல், திருமயம், ராங்கியம், விரையாசிலை, சிவபுரி, சிங்கம்புணரி என்று பல இடங்களில் இவை காணப்படுகின்றன. கோயில், மடம், சத்திரம், குளம் போன்ற இடங்களில் இவை காணப்படுகின்றன.

சேதுபதி கல்வெட்டுகள் பெரும்பாலும் சுருக்கமாகச் செய்தியை நேரடியாகச் சொல்கின்றன. இவற்றில் சக ஆண்டோடு, பிற பஞ்சாங்கக் குறிப்புகளும் மன்னரின் பெயரும் குறிப்பிடப்படுகின்றன. சில கல்வெட்டுகளில் செப்பேடுகளைப் போன்று மன்னரின் புகழைக் கூறும் மெய்க்கீர்த்தியும் பட்டப் பெயர்களும் காணப்படுகின்றன.

சேதுபதி கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயிலுக்குக் கொடுத்த கொடைகள் பற்றியே பேசுகின்றன. இராமேசுவரம் போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுகள் கோபுரம், திருச்சுற்று, மண்டபம் கட்டியதையும் பூசைக்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றியும் தெரிவிக்கின்றன. இன்னும் சில இடங்களில் உள்ளவை சிவன் கோயிலுக்கும், பெருமாள் கோயிலுக்கும் அளிக்கப்பட்ட தானங்கள் பற்றியவையாகும். போகலூர், கண்ணாரங்குடி, ஆலம்பட்டி போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுகள் அய்யனார் கோயிலுக்குச் சேதுபதிகள் செய்த திருப்பணிகள் பற்றி எடுத்துக் கூறுகின்றன.

காட்டுபாவா பள்ளிவாசலுக்கும் முத்துப்பேட்டை தேவாலயத்திற்கும் சேதுபதிகள் சமயப்பொறையுடன் செய்த அறக்கொடைகள் பற்றி அங்குள்ள கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன. மடங்கள், சத்திரங்கள் அமைப்பதற்கும் அங்கு பசித்து வந்தோர்க்குச் சோறும், தண்ணீரும் அளிப்பதற்கும் தானங்கள் தந்துள்ளதையும் சேதுபதி கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. முதலூரிலுள்ள கல்வெட்டு சேதுபதி செய்த நீர்பாசனப் பணி பற்றிக் கூறுகிறது.

**சேதுபதி கல்வெட்டுத் துளிகள்**

இராமேசுவரத்திலுள்ள உடையான் சேதுபதி கல்வெட்டு இராமேசுவரம் திருக்கோயிலின் மேற்குக் கோபுரத்தையும், திருச்சுற்று மதிலையும் கட்டியதைக் கூறுகிறது. கூத்தன் சேதுபதி கல்வெட்டு கி.பி. 1623-இல் இராமநாதசுவாமி கோயிலின் முதற் பிரகாரத்தில் திருநடை மாளிகையையும் ஆருட மண்டபத்தையும் கட்டியதைத் தெரிவிக்கிறது.

கி.பி. 1624-இல் கூத்தனான சேதுபதி காத்ததேவர் மகன் உடையநாயனார் சேதுபதி புகலூர் (போகளூர்) "பெரும்பகழி கூத்தன்" என்றழைக்கப்பட்ட அய்யனார் கோயிலைக் கட்டியதைப் போகலூர் அய்யனார் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கி.பி. 1637-இல் தளவாய் சேதுபதி முதலூர் கண்மாயைச் சீர்செய்து அதில் இருமடைகளும் கலிங்கும் அமைத்ததை முதலூர் கல்வெட்டுக் கூறுகிறது.

திருமயம் வட்டத்திலுள்ள இராங்கியம் என்ற ஊரின் குளக் கரையில் நடப்பட்டுள்ள கல்வெட்டு திருமலை ரகுநாத சேதுபதி தில்லை நடராசர் கோயிலுக்கு மறவணியேந்தலைத் தானமாகத் தந்ததைத் தெரிவிக்கிறது.

திருமயம் திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் உள்ள காட்டுப்பாவா சாகிப் பள்ளிவாசலுக்குக் கிழவன்சேதுபதிமகன் இரணசிங்கதேவர் அருக்கன்குளம், காஞ்சவன்குளம் முதலிய கிராமங்களைத் தானமாக அளித்ததை அங்குள்ள கல்வெட்டு கூறுகிறது.

கண்ணாரங்குடிக்கு அருகில் அமைந்த குளுவன்குடி கண்மாய்க்கரையில் நடப்பட்டுள்ள கல்வெட்டு குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதியின் அலுவலர் இரகுநாத காங்கேய சேர்வைகாரன் சேதுவில் (சேது மார்க்கம்) சோமவாரக் கட்டளை அன்னதானத்திற்காக முத்து நாட்டைச் சார்ந்த குளுவன்குடிக் கண்மாய் நீர்பாசனத்தில் விளையும் நிலங்களிலிருந்து வரும் அரசவருவாயை அளித்ததைக் கூறுகிறது.

கி.பி. 1781-இல் முத்துப்பேட்டை தேவாலயத்திற்காக முத்துராம லிங்க விஜய ரகுநாத சேதுபதி சங்கரன்வலசை என்ற ஊரைத் தானமாகத் தந்தார். மேலும் முத்துப்பேட்டை சுங்கச் சாவடியிலிருந்து இரண்டு பணங்கள் நாள்தோறும் அளிக்கச் செய்தார். இதனை முத்துப்பேட்டையிலுள்ள சேதுபதி கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

இதம்பாடல் சத்திரத்திலுள்ள கல்வெட்டு அங்குள்ள சத்திரத்தை கி.பி. 1837-இல் இராணி முத்துவீராயி நாச்சியாரும் அவரது உடன் பிறந்த முத்துச்செல்லத்தேவரும் அமைத்ததைக் கூறுகிறது.

இராமநாதபுரம் அரண்மனை வளாகத்திலுள்ள இராஜராஜேஸ்வரி கோயில் விமானத்தினை கி.பி. 1893-இல் தங்க விமானமாக்கித் திருப்பணி செய்தார் பாஸ்கரசேதுபதி என்று அங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

### சேதுபதி செப்பேடுகள்

தமிழ்நாட்டில் அதிக அளவில் செப்பேடுகளை வெளியிட்ட அரச மரபினரில் சேதுபதிகளும் ஒருவர். இதுவரை சேதுபதிகளின் நூற்றுபத்துச் செப்பேடுகள் கண்டறியப்பட்டு வெளியிடப்பட்டு உள்ளன. சேது நாட்டில் உள்ள கோயில்கள், பள்ளிவாசல், தேவலாயம், சத்திரங்கள், திருப்பனந்தாள், தருமபுரம் போன்ற புகழ்பெற்ற சைவ மடங்கள், தனியாரிடத்திலும் இவை காணப்படுகின்றன. சென்னை அருங்காட்சியகத்திலும், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இராமலிங்க விலாசம் அருங்காட்சியகத்திலும் இவை சேகரித்து

வைக்கப்பட்டுள்ளன. எஸ்.எம். காமல், புலவர் செ. இராசு ஆகிய இருவரும் இவற்றைத் தொகுத்து தனித்தனியாக சேதுபதி செப்பேடுகள் என்ற பெயரில் நூல்களை வெளியிட்டுள்ளனர்.

சேதுபதி செப்பேடுகள் நீள்சதுரம் மற்றும் செவ்வக வடிவங்களில் உள்ளன. தமிழோடு கிரந்த எழுத்துக்கள் கலந்து தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் தெலுங்கில் சேதுபதியின் கையொப்பம் இடப்பட்டுள்ளது. சிலவற்றில் கோட்டு உருவங்கள் வரையப்பட்டுள்ளன. ஒவ்வொரு செப்பேட்டிலும் மங்கலச்சொல், காலக்குறிப்பு, மெய்க்கீர்த்தி, செப்பேட்டுச் செய்தி, தானத்தைக் காக்கும்படியாகச் சொல்லப்பட்ட ஓம்படைக்கிளவி ஆகியவை ஒன்றையடுத்து ஒன்றாக எழுதப் பட்டுள்ளன. இச்செப்பேடுகள் 20 செ.மீ × 32 செ.மீ., 13 செ.மீ × 48 செ.மீ என்று பல்வேறு அளவுகளைக் கொண்டதாக உள்ளன. செப்பேடுகளின் ஒருபுறம் பிறைவடிவ அமைப்பு துளையுடன் காணப்படுகிறது.

சேதுபதிகள் மற்றும் அவர்களது அரசியல் அலுவலர்கள் இச்செப்பேடுகளை அளித்துள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை கோயில்களுக்குக் கொடுத்த கொடையைப் பற்றிக் கூறுகின்றன. இராமேசுவரம் கோயிலுக்கே அதிக அளவில் செப்பேடுகளைச் சேதுபதிகள் அளித்துள்ளனர். திருப்புல்லாணி, பெருவயல், தேவிப்பட்டினம், உத்திரகோசமங்கை, இராமநாதபுரம், சிதம்பரம், திருவாரூர், பழனி, அழகர்கோயில், திருப்பெருந்துறை போன்ற இடங்களிலுள்ள கோயில்களுகக்கு அறக்கொடைகள் அளித்து செப்பேடுகள் எழுதித் தந்துள்ளனர். இராமநாதபுரம், புதுமடம், ஏர்வாடி, இராமேசுவரம், கீழக்கரை போன்ற இடங்களிலுள்ள பள்ளிவாசல்களுக்கும் செப்பேடுகள் வழங்கியுள்ளனர்.

சேதுபதி செப்பேடுகளில் சில செப்பேடுகள் உரிமை சிக்கல்களைத் தீர்த்து வைத்தல், கொலை வழக்கு, காணியாட்சி, மக்கள் குடியேற்றம், நில விற்பனை, பெண்களைச் சிறை எடுத்தல், முத்துக்குளித்தல் தொடர்பானவையாக உள்ளன.

சேதுபதி நாட்டின் அரசியல், பொருளியல், நீதி, நிர்வாகம், சமயம், சமுதாயம், தொழில்கள், குற்றங்கள், தண்டனை, நீர்நிலைகள் ஆகியவற்றை அறிய இச்செப்பேடுகள் பெரிதும் துணைபுரிகின்றன.

## செப்பேட்டுச் செய்திகள்

### இராமேசுவரம் செப்பேடு

சேதுபதிகள் இராமேசுவரம் கோயில் நிர்வாகத்தினை மேற்கொள்ளுவதற்கு 'இராமநாத பண்டாரம்' என்ற பெயரில் நிர்வாகி ஒருவரை நியமித்தனர். தளவாய் சேதுபதி கி.பி. 1610-இல் இராமேசுவரம் கோயில் தொடர்பானவர்கள் குற்றம் செய்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரத்தினை இராமநாத பண்டாரத்திற்கு அளித்துள்ளார்.

### சென்னை அரசு அருங்காட்சியகச் செப்பேடு

தளவாய் சேதுபதி காத்ததேவர் மன்னார் முத்துசலாபத் துறையில் ஏழு கல் அளவு மூழ்கி எடுத்த முத்துகளின் ஒரு பகுதியை இராமேசுவரம் கோயிலுக்கு அளிக்க ஆணை வழங்கியுள்ளார்.

### இராமநாதபுரம் அருங்காட்சியகச் செப்பேடு

இராமேசுவரம் கோயில் வழிபாட்டுப் பணிகள் செய்து வந்த குருக்கள்மார் (மராட்டிய அந்தணர்கள்) சபையார், தமிழ் ஆரியர் ஆகியோர்க்குரிய உரிமைகள், கடமைகள் என்னவென்று வரையறுத்துக் கூறப்பட்டன. இது தொடர்பாக திருமலை நாயக்கருக்கும் தளவாய் சேதுபதி காத்ததேவருக்கும் உரியவர்கள் இசைபுமுறி ஒன்றை கி.பி.1632-ல் எழுதிக் கொடுத்துள்ளனர்.

### சேதுக்கால் செப்பேடு

தளவாய் சேதுபதிக்குத் தளவாய் என்ற பெயர் கொடுத்து இராமநாதசுவாமி விருது, காவிப்படால், காவி கூடாரம், காவி

பன்னாகரம், காவிகுடை, உடையசாமரம் முதலியவற்றை அளித்தமையால் இராமநாதசுவாமிக்கு நன்றிக் கடனாகச் சேதுக்கால் என்ற ஊரைத் தானமாகத் தளவாய் சேதுபதி கி.பி. 1632-இல் தந்துள்ளார். இராமநாதபுரம் சேதுபதிகள் தமக்குரிய ஆட்சிப் பொறுப்பை இராமநாதசுவாமியே தந்துள்ளார் என்று கருதியுள்ளனர் என்று இச்செப்பேடு உணர்த்துகிறது.

### ஆனந்தூர்ச் செப்பேடு

திருமலை சேதுபதிக்குப் புண்ணியமாக கி.பி. 1667-இல் பெருமாள் சேருவைகாரன் இராமேசுவரம் இராமநாதசுவாமி அன்னதானக் கட்டளைக்காக ஆனந்தூர், பாப்பாகுடி ஏந்தல் முதலிய ஊர்களைத் தானமாகத் தந்துள்ளார்.

### உத்தரகோசமங்கைச் செப்பேடு

இரகுநாத திருமலை சேதுபதி கி.பி. 1678-இல் தம்து பெற்றோர், பெண்மக்கள் புண்ணியத்திற்காக உத்திரகோச மங்கை ஊரை மங்களநாதசுவாமிக்கு அளித்துள்ளார்.

### சுந்தரபாண்டிய பட்டணம் செப்பேடு

கி.பி. 1684-இல் இரகுநாத சேதுபதியால் சுந்தரபாண்டிய பட்டணத்திலுள்ள அக்கிரகாரம், மடம், ஏகாம்பரநாதர் கோயில் பூசைக்காக எட்டுக் கிராமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### இளமனூர்ச் செப்பேடு

இளமனூரைச் சார்ந்த சோளகை சேர்வைக்காரனும் அவனது மனைவி கொண்டொடிக்காரியும் இரகுநாத சேதுபதியை நீண்ட நாட்கள் காத்திருந்து கண்டனர். இதனால் சேதுபதி கொண்டொடிக் காரிக்கு அரண்மனை வாசல் பணியும், சோளகை சேர்வைக் காரனுக்குச் சிறுபடைக்குத் தலைமைப் பொறுப்பையும் கொடுத்தார். இளநேரியில் காடுகரை வெட்டி குடிகள் அமர்த்திக்கொள்ள கி.பி. 1687-இல் ஆணை வழங்கினார்.

## பலிசாதனச் செப்பேடு

வலையர்குடியைச் சேர்ந்த வேலாந்தரவை வீரமூப்பனின் பேத்தி வீராயிக்கும் இளமநேரி நயினுக்குப்புச் சேர்வைக்காரனுக்கும் ஏற்பட்ட தொடர்பால் வீராயி கர்ப்பம் அடைந்தாள். ஊராரின் ஏச்சுக்கு ஆளான வீராயி இறந்துபோனாள். இதனால் சேதுபதிகளிடம் இருதரப்பினரும் சென்று முறையிட்டனர். இரகுநாத சேதுபதி சேர்வைக்காரனைப் பலிக்குப் பலியாக அவனது தங்கை உடையக் காளை அளிக்குமாறு தீர்ப்பளித்தார். வீராயி தனியாக ஒரு சிதையிலும், உடையக்காளை உயிருடன் தனியாக ஒரு சிதையிலும் வைத்து தீவைத்தனர். அவ்வேளைகளில் மூப்பமார் குடியினர் முன்வந்து உடையக்காளைச் சிதையிலிருந்து மீட்டு தமது மகளாக ஏற்றுக்கொண்டனர். சாதிப்பிள்ளை என்று அவளுக்குப் பட்டமும் கொடுத்தனர்.

## திருப்புல்லாணிச் செப்பேடு

கி.பி. 1699-இல் இரகுநாத சேதுபதி காலத்தில் திருப்புல்லாணி தெய்வச்சிலைப் பெருமாளுக்கும் தற்பசயனம் இராமசுவாமிக்கும் ஒரு தோணியில் ஐந்து கல்தூரம் முத்துக்குளிக்கும் தூரம் மானியமாக அளிக்கப்பட்டது.

## கோட்டக்குடிச் செப்பேடு

கிடாரம்கொண்டானைச் சார்ந்த சர்க்கரைப் புலவருக்கு கோட்டக்குடி, கொந்தலான்வயல் ஆகிய கிராமங்கள் கி.பி. 1711-இல் முத்து வயிரவநாதத் தேவரால் தானமாக அளிக்கப்பட்டன.

## திருப்பொற்கோட்டைச் செப்பேடு

கி.பி. 1733-இல் திருவாவடுதுறை மடத்திற்காக ஏழுகோட்டை நாட்டிலிருந்து திருப்பக்கோட்டை தானமாகத் தரப்பட்டது. மேலும் சேதுபதி நாட்டு எட்டு மாகாணத்தில் இருக்கின்ற வணிகர்கள் திருவாவடுதுறை ஆதினத்திற்கு மகமை அளிக்க வேண்டும் என்று இரகுநாத சேதுபதி காத்ததேவரால் ஆணை வழங்கப்பட்டது.

**ஈசா பள்ளிவாசல் செப்பேடு**

இராமநாதபுரம் நகரிலுள்ள ஈசா பள்ளிவாசலில் அன்னதானத் தர்மத்திற்காக கி.பி. 1734-இல் குமாரமுத்து விசையரகுநாத சேதுபதியால் 'கிழவனேரி' என்ற ஊர் தானமாகத் தரப்பட்டது.

**ஏர்வாடிச் செப்பேடு**

முத்துக்குமார விசைய இரகுநாத சேதுபதி ஏர்வாடி தர்காவிற்காக 'பெரியமாயாகுளம்' என்ற ஊரையும் உத்திரகோச மங்கையில் சில நிலங்களையும் தானமாக கி.பி. 1742-இல் தந்துள்ளார்.

**தெஞ்சியேந்தல் செப்பேடு**

கி.பி.1781-இல் முத்துவிசைய இரகுநாத சேதுபதி முத்துப்பேட்டை கிறித்தவ தேவாலயத்திற்குத் தெஞ்சியேந்தலைத் தானமாகத் தந்தார். மேலும் பெரியபட்டணம் முத்துப்பேட்டை சங்கத்திலிருந்து நாள்தோறும் இரண்டு பணம் தேவாலயத்திற்குத் தர கட்டளையிட்டார்.

**செப்பேடுகண்டான் செப்பேடு**

முத்துராமலிங்க விசைய இரகுநாத சேதுபதி கி.பி. 1783-இல் யஜுர் வேதத்தில் வல்ல கிருஷ்ணயங்காருக்கு மேச சங்கிராந்தி புண்ணியகாலத்தில் செப்பேடுகண்டான் என்ற முத்துராமலிங்க பூபாலச்சமுத்திரத்தைத் தானமாகத் தந்தார்.

**அனுமந்தக்குடிச் சமணர்கோயில் ஓலைச்சாசனம்**

கி.பி. 1783-இல் முத்துவிசய இரகுநாத சேதுபதி அனுமந்தக் குடியிலுள்ள அருகபரமேசுவரர் மாளுவநாயகர் கோயில் என்றழைக்கப்பட்ட சமணர் கோயிலுக்கு ஏற்கனவே இருந்த ஊருக்கு மாற்றாக வடக்குச் செய்யானேந்தல் என்ற ஊரை அளித்தார்.

# சேதுபதி காசுகள்

சேதுபதி மன்னர்கள் வட்டவடிவில் அமைந்த செம்பாலான காசுகளை வெளியிட்டுள்ளனர். இவற்றின் ஒருபுறம் தங்களது பெயரையும் மறுபுறம் பல்வேறு உருவங்களையும் பொறித்துள்ளனர். இக்காசுகள் 2.2 கிராம் முதல் 3.2 கிராம் வரை எடையைக் கொண்டுள்ளன.

சேதுபதி வெளியிட்ட செப்புக் காசுகளில் ஒருபுறம் "சேதுபதி" என்று தமிழில் எழுதப்பட்டிருக்கும். மறுபுறம் சிவன், முருகன், திருமால், இராஜராஜேஸ்வரி ஆகியோரது மீது அவர்கள் கொண்ட பக்தியை வெளிப்படுத்துகின்ற முறையில் அத்தெய்வங்களின் உருவங்களில் ஒன்று பொறிக்கப்பட்டிருக்கும். சில காசுகளில் சிவனது வடிவங்களான ரிஷபவாகனர், ரிஷிபாரூடர், உருவங்களும் இலிங்கத்தினைச் சுமந்து நிற்கும் காளையின் உருவமும் காணப்படுகின்றன. முருகனது வாகனமான மயிலும், ஆயுதமான வேலும், ஆறுமுகனாக முருகன் மயில் மீது அமர்ந்த கோலமும் சில காசுகளில் உள்ளன. இன்னும் சில காசுகளில் அமர்ந்த நிலையிலுள்ள இராஜராஜேஸ்வரி அம்மன், கணபதி, அனுமன், கருடன் ஆகியோரது உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை தவிர மலர்ச்செடி, யானை, அன்னம் முதலிய உருவங்களும் சேதுமன்னர் காசுகளில் இடம்பெற்றுள்ளன.

சேதுபதிகள் ஒருபுறம் தெலுங்கில் "ஸ்ரீராமஜெயம்" என்றும் மறுபுறம் "சேதுபதி" என்றும் எழுதப்பட்ட காசுகளையும் வெளியிட்டு உள்ளனர். தளவாய் சேதுபதியும் ஸ்ரீ உடையதேவர் என்ற முத்துவிஜய ரகுநாத சேதுபதியும் தங்களது பெயர் பொறித்த காசுகளை

வெளியிட்டுள்ளனர். தளவாய் சேதுபதியின் (கி.பி. 1635-1645) காசில் ஒருபுறம் "ராசராசதளவாய்" என்ற அவரது பெயரும் மறுபுறம் நிற்கும் மயிலின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. முத்துவிஜய ரகுநாத சேதுபதியின் காசில் ஒருபுறம் "ஸ்ரீஉடையதேவர்" என்ற அவரது பெரும் மறுபுறம் ரிஷபவாகனர் அல்லது ரிஷிபாரூடர் அல்லது இலிங்கத்தினைச் சுமந்து நிற்கும் காளையின் உருவங்கள் காணப்படுகின்றன.

சேதுபதி காசுகளை அச்சிட்டு வெளியிடக்கூடிய நாணய சாலைகள் இராமநாதபுரம், இராமேஸ்வரம் முதலிய இடங்களில் இருந்துள்ளன. சேதுநாட்டில் புழக்கத்தில் இருந்த பல காசுகளின் பெயர்களைச் சேதுபதி மன்னர் வெளியிட்ட செப்பேடுகளிலிருந்து அறியமுடிகிறது. இவை பொதுவாகப் பொன், பணம் என்று அழைக்கப்பட்டன. வீரராயன்பொன், வீரராயன்பணம், சுழிமின்னல் பொன், சுழிப்பணம், மின்னல் பணம், மதுரைப் பொன் என்று குறிப்பிடப்படுகின்றன.

## சேதுபதிகளின் அறக்கொடைகள்

சேதுபதிகள் சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் அளித்த கொடைகள் ஏராளம். பலவித போராட்டங்கள் நிறைந்த அரசியல் வாழ்வில் இத்துணையளவு அறக்கொடைகள் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. சேதுபதிகளின் செப்பேடுகள், கல்வெட்டுகள், இராமநாதபுரம் அரண்மனை ஆவணங்கள் ஆகியவை இவைப் பற்றித் தெரிவிக்கின்றன. சேதுநாட்டு வரலாற்றாசிரியர் எஸ்.எம். கமால் சேதுபதிகள் அளித்த கொடைகளைப் பின்வருமாறு பட்டியலிட்டுத் தந்துள்ளார்.

| வ.எண் | தானம் பெற்றோர் | தானம் பெற்றோர் எண்ணிக்கை | தானம் வழங்கிய ஊர்கள் |
|---|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 59 | 311 |
| 2. | மடங்கள் | 22 | 41 |
| 3. | சத்திரங்கள் | 28 | 77 |
| 4. | பள்ளிவாசல் | 10 | 13 |
| 5. | கிருத்துவ தேவாலயம் | 1 | 2 |
| 6. | தமிழ்ப்புலவர் | 9 | 12 |
| 7. | வாழ்வில் சிறப்புடைய தனி நபர்கள் | 210 | 219 |
| | மொத்தம் | 339 | 675 |

**சத்திரங்கள்**

கோயில்களை அடுத்து அக்கோயில்களுக்குப் புனித பயணம் மேற்கொள்ளும் பயணிகள் தங்கும் இடங்களுக்கே சேதுபதிகள் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளனர். சேது நாட்டின் ஆன்மீகக் கருவூலமாக அமைந்த இராமேசுவரம் கோயிலுக்கு வரும் பயணிகளுக்கு இருப்பிடம், உணவு, தண்ணீர் தந்து பாதுகாப்பு அளிப்பதே சேதுபதி அரசின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாக அமைந்திருந்தது. வடக்கே தஞ்சை, திருச்சி பகுதியிலிருந்து சேது நாட்டிற்குள் நுழைந்து கிழக்குக் கடற்கரை வழியாக இராமேசுவரத்திற்கு ஒரு பெருவழி சென்றது. இதேபோன்று தமிழ்நாட்டின் தென்பகுதியிலிருந்து கிழக்குக் கடற்கரை வழியாக இராமேசுவரத்திற்கு மற்றொரு பெருவழி சென்றது. மூன்றாவது வழி மதுரையிலிருந்து இராமேசுவரம் சென்ற பெருவழியாகும். இவை "சேதுமார்க்கம்" எனப்பட்டன. சேதுமார்க்கத்தில் தங்கள் நாட்டுப்

பகுதியில் சுமார் பத்து மைல்களுக்கு ஒரு சத்திரத்தினைச் சேதுபதிகள் அமைத்துள்ளனர். இவற்றிற்கு வருகின்ற பயணிகளுக்கு மூன்று நாட்களுக்குத் தங்குமிடம் அளித்து இருவேளை உண்ண உணவும் இலவசமாக அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். இப்பெருவழிகளில் அமைக்கப்பட்ட இருபத்தெட்டு சத்திரங்களுக்கு எழுபத்தேழு ஊர்களின் வருமானத்தினை அளித்துள்ளதை சேதுபதி ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

**சேதுபதி சத்திரங்கள் அமைத்த இடங்கள்**

| | |
|---|---|
| இராமேசுவரம் | கடுகுசந்தை |
| தனுஷ்கோடி | அலங்கானூர் |
| பாம்பன் | இதம்பாடல் |
| மண்டபம் | சிக்கல் |
| அக்காமடம் | பிள்ளைமடம் |
| தங்கச்சிமடம் | எண்மனங்கொண்டான் |
| புதுமடம் | சேதுக்கு வாய்த்தான் |
| நாகநாதசமுத்திரம் | சூடியூர் |
| புதுமடம் | பிடாரச்சேரி |
| கோட்டைபட்டினம் | மல்லாங்கிணறு |
| முத்துராமலிங்கபட்டினம் | போகலூர் |
| தேவிப்பட்டினம் | தோப்பூர் |
| திருப்பாலைக்குடி | உப்பூர் |
| இராமநாதபுரம் | |

**மடங்கள்**

சேதுபதிகள் சைவ, வைணவ சமய வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்ற முறையில் சேது நாட்டில் இருந்த பல மடங்களுக்கு ஆதரவளித்து அறக்கொடைகள் அளித்துள்ளதை ஆவணங்கள் தெரிவிக்கின்றன. சேது நாட்டில் இருந்த இருபத்திரண்டு மடங்களில்

இருபத்தொரு மடங்கள் சைவ மடங்களாகும். பரமக்குடிப் பகுதியில் உள்ள பண்டரிநாதர் மடம் மட்டும் வைணவ சமய மடமாகும். பின்வரும் மடங்கள் சேதுபதிகளின் ஆதரவு பெற்ற மடங்களாகும்.

| **ஊர்** | | **மடம்** |
|---|---|---|
| இராமேசுவரம் | .. | மாசிலாமணி பண்டாரமடம் |
| சித்தனேந்தல் | .. | பண்டரிநாத மடம் |
| அழகன்குளம் | .. | மூர்த்தி மடம் |
| உத்தரவை | .. | பண்டார மடம் |
| தளிர் மருங்கூர் | .. | காசி மடம் |
| ,, | .. | சொக்கநாத மடம் |
| பாப்பாகுடி | .. | பாப்பாகுடி மடம் |
| வாகைக்குளம் | .. | வாகைக்குளம் மடம் |
| நாகாட்சி | .. | நாகாட்சி மடம் |
| முத்துராமலிங்கபுரம் | .. | முத்துராமலிங்கபுர மடம் |
| தமோதர பட்டினம் | .. | தமோதரபட்டின மடம் |
| ,, | .. | அக்காள் மடம் |
| ,, | .. | மாவூர் மடம் |
| ,, | .. | சித்துரெட்டியார் மடம் |
| பெருங்கரை | .. | தெய்வராயன் மடம் |
| சாருவனேந்தல் | .. | பள்ளி மடம் |

### சேதுபதியும் விவேகானந்தரும்

அமெரிக்க நாட்டில் சிகாகோ நகரத்தில் நடைபெற்ற அகில உலக சமய மாநாட்டில் கலந்துகொள்ள விவேகானந்தரைத் தனது சொந்தச் செலவில் அனுப்பி வைத்த பெருமை சேதுபதி மன்னர்கள் வழிவந்த பாஸ்கர சேதுபதியைச் சாரும். இதன் மூலம் இந்திய ஆன்மீகவுலகத்திற்குப் பெரும் புகழைத் தேடிதந்தார். விவேகானந்தரின் புகழ் அதன் பிறகு பாரெல்லாம் பரவ

வழியேற்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் தாயகம் திரும்பும்போது அதனை நன்றியுடன் நினைத்த விவேகானந்தர் வெளிநாட்டுப் பயணம் முடிந்து முதலில் சேதுபதி நாட்டிலுள்ள பாம்பன் துறைமுகத்திலேயே 23.1.1897-இல் வந்து இறங்கினார். விவேகானந்தருக்கு அங்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பாஸ்கர சேதுபதிக்கு நன்றி தெரிவிப்பதற்காக 25.1.1897-இல் விவேகானந்தர் இராமநாதபுரம் அரண்மனைக்கு வந்தார். இராமலிங்க விலாசத்தில் அவருக்குச் சிறப்பான மரியாதையும் வரவேற்பும் மன்னரால் அளிக்கப்பட்டன.

பாஸ்கர சேதுபதி, விவேகானந்தர் பாம்பனில் வந்து இறங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை நினைவுகொள்ளும் முறையில் பின்வரும் கல்வெட்டு ஒன்றை அங்கு நட்டு வைத்தார்.

"சத்தியமேவ ஜெயதே இந்திய நாட்டின் சமயப் பண்பாட்டுச் சிறப்பினை மேலை நாடுகளில் பரப்பி வெற்றிப் பரணியுடன் தாயகம் திரும்பிய சுவாமி விவேகானந்தரது புனிதபாதத் துளிகள் பட்ட முதல் புனித இடம் இது."

## சேதுபதியும் இசுலாமியர்களும்

சேதுபதி மன்னர்களின் சமயப்பொறைக்குச் சான்றாகச் சேதுபதி இசுலாமியர் உறவு இருந்துள்ளது. சேது நாட்டு வரலாற்றில் இசுலாமியர்க்கு ஒரு குறிப்பிடத்தக்க இடமுண்டு. சேதுபதியின் உத்திரகோசமங்கைச் செப்பேடு இசுலாமிய மக்களை "நமது காவல் குடியினர்" என்று குறிப்பிடுகிறது. கீழக்கரையில் வாழ்ந்த சீதக்காதி என்ற வணிகச் செல்வந்தர் கிழவன் சேதுபதியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். சேது நாடு செழிக்க சீதக்காதியின் கடல் கடந்த பன்னாட்டு வணிகம் உதவியது.

இசுலாமியர் வழிபாட்டுத் தலங்களுக்கும் புனிதர் அடக்கமான இடங்களுக்கும் பலவூர்களைத் தானமாகத் தந்துள்ளனர் சேதுபதி மன்னர்கள். அவற்றை உரியவர்களுக்குச் செப்பேடுகளில் எழுதி

உறுதியளித்து ஆணை வழங்கினர். சேதுபதிகளின் ஆவணப் பதிவேடுகளிலும் இசுலாமியர்க்கு வழங்கிய கொடைக் குறிப்பிடப்படு கின்றன. இராமநாதபுரம் ஈசா பள்ளிவாசலுக்கு கி.பி. 1744-இல் கிழவனேரி என்ற ஊரை குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி வழங்கினார். சிவகுமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி இராமேசுவரம் ஆபில்காபில் தர்காவிற்குப் புதுகுளம் என்ற ஊரை அளித்தார். இவரே ஏர்வாடி இபுராகிம் பள்ளிக்கு மாயாகுளத்தையும், கீழக்கரை சதக்கத்துல்லா அப்பா தர்காவிற்கு கீழத்தில்லையேந்தல் கிராமத்தினையும் அனுமந்தக்குடி மீராசா தர்காவிற்கு குணவதி மங்கலத்தையும், தானமாகத் தந்துள்ளார். கிழவன் சேதுபதி காரேந்தல் பள்ளிவாசலுக்குத் திருச்சுழியல் பகுதியில் நிலக்கொடையும் பூலாங்கால் பள்ளிவாசலுக்கு கி.பி. 1721-இல் முத்துவிஜயரகுநாத சேதுபதி பூலாங்காவில் நிலக்கொடையும் அறித்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள காட்டுபாவா சாகிபு பள்ளிவாசலுக்கு கி.பி. 1696-இல் காஞ்சரங்குளம் என்ற கிராமத்தினை அளித்துள்ளார்.

## செந்தமிழ் வளர்த்த சேதுபதிகள்

சேதுக் காவலர்களான சேதுபதிகள் செந்தமிழுக்கும் காவலர்களாக இருந்தனர். முத்தமிழ் வளர்ச்சிக்குச் சேதுபதிகள் செய்த தொண்டினை அளப்பது அரிது. தமிழ் புலவர்கள், தமிழ் இசைக் கலைஞர்கள், ஆடல் கலைஞர்கள் சேதுபதிகளின் அவையை எப்போதும் அலங்கரித்துள்ளனர். இராமலிங்க விலாசத்திலுள்ள ஓவியங்களே இதற்குச் சான்று. இராமலிங்க விலாசத்தில் பல்வேறு ஆடல் பாடல்களைச் சேதுபதிகள் கண்டுகளிப்பது போன்ற வண்ணவோவியங்கள் பலவுள்ளன. கட்டிலில் படுத்துறங்கும் புலவர் ஒருவருக்கு கவிரி வீசும் சேதுபதியின் ஓவியம் ஒன்று அங்கு உள்ளது. இது சங்கப் புலவரை ஆதரித்த தமிழ் மன்னரைப் போன்று சேதுபதிகள் விளங்கியதை நினைவூட்டுகிறது.

திருமலை சேதுபதி தம் மீது "ஒரு துறைக் கோவை" பாடிய அமிர்தக் கவிராயர்க்குப் பதினாயிரம் பொற்காசுகள் அளித்துப்

பெருமைப்படுத்தியதோடு கொன்னங்கால் என்ற ஊரையும் புலவருக்குத் தானமாகத் தந்தார். திருமலை சேதுபதி அழகிய சிற்றம்பலக்கவிராயர் தம்மீது பாடிய "தளசிங்கமாலை" என்ற இலக்கியத்திற்காக மிதிலைப்பட்டி என்ற ஊரோடு ஏழு கிராமங்களை அப்புலவருக்குக் கொடையாகக் கொடுத்தார். மருதூர் அந்தாதி இயற்றிய நயினார்கோயில் தலமலைகண்ட தேவர் என்ற அந்தகக் கவிராயர்க்குக் கிழவன் சேதுபதி பரிசில்கள் பலதந்து சிறப்பித்தார். முத்துவிசைய ரகுநாத சேதுபதி "பணவிடுதூது" "தேவை உலா" ஆகியவற்றை இயற்றிய மதுரைச் சொக்கநாத புலவர்க்குப் பரிசில்கள் தந்து பாராட்டினார். மக்களின் மனத்தினை ஈர்க்கும் வகையில் இராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்த செழுவனூர் சர்க்கரைப் புலவருக்கு அரசவையில் பொன் நெட்டிமாலை அளித்ததோடு சில கிராமங்களையும் தானமாகத் தந்தார்.

பாஸ்கர சேதுபதி மருதூர்ப் புராணத்தைப் படைத்த கருமுத்துப் புலவரைத் தமது பட்டத்து யானை மீது அமர வைத்து நகரினை வலம் வரச் செய்து வெகுமதிகள் பல கொடுத்தார். பாஸ்கர சேதுபதி காலத்தில் சமஸ்தானப் புலவராக விளங்கியவர் பெருந்தமிழ் புலவர் ரா. இராகவைய்யங்கார். இவரை மதுரையில் பல்லக்கில் அமர்த்தி பவனி வரச்செய்த பாஸ்கர சேதுபதி தானும் பல்லக்குச் சுமப்போருடன் சேர்ந்து அப்பல்லக்கைச் சுமந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாஸ்கர சேதுபதியின் அன்பைப் பெற்ற வள்ளல் பாண்டித் துரைத் தேவர் 14.9.1901-இல் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத் தினைத் தோற்றுவித்தார். இதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் பாஸ்கர சேதுபதி, முத்துராமலிங்க சேதுபதி, பொன்னுச்சாமி தேவர் ஆகியோர் ஆவர். மூவேந்தர்க்குப் பிறகு தமிழ்ச் சங்கம் வைத்த பெருமை சேதுபதிகளுக்கே உண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஏராளமான புலவர்கள் ஆதரித்துப் போற்றப்பட்டனர். ஆண்டுதோறும் இராமநாதபுரம் அரண்மனையில் சேதுபதிகள் நடத்திய நவராத்திரி விழாவின்போது முத்தமிழில் சிறந்த புலவர்களும் ஆடல், பாடல் கலைஞர்களும் போற்றிப் பெருமைப்படுத்தப்பட்டனர்.

## தமிழ்ச் சங்கம் கண்ட சேதுபதிகள்

பாஸ்கர சேதுபதியின் சகோதரர் வள்ளல் பாண்டித்துரை தேவரால் மதுரையில் தொடங்கப்பட்ட தமிழ்ச் சங்கம் பல அரும்பணிகள் செய்துள்ளது. இப்பணிகள் சிறக்க இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி அவரது தமையன் பொன்னுச்சாமிதேவர், மன்னர் பாஸ்கரசேதுபதி ஆகியோர் உறுதுணை புரிந்தனர்.

சேதுபதிகள் ஏட்டுச் சுவடிகளைத் திரட்டித் தமிழ்ச் சங்கத்தில் வைத்தனர். யாழ்பாணம் ஆறுமுக நாவலர், புலவர் சபாபதி பிள்ளை ஆகியோரைக் கொண்டு சைவ சாத்திர நூற்களைப் பொன்னுசாமி தேவர் பதிப்பித்தார். உ.வே. சாமிநாதையரின் பதிப்புப் பணியைப் பாராட்டி சேதுபதிகள் பொருள் உதவி செய்தனர். சிவகாசி கந்தசாமிப் புலவர், சேத்தூர் சுப்பிரமணியக் கவிராயர், எதிர்கோட்டை நாராயண ஐயங்கார், சோழவந்தான் அரசஞ்சண்முகனார், மாம்பழக் கவிராயர், நாகூர் குலாம் காதிர், நாவலர் ரா. இராகவைய்யங்கார் என்று ஏராளமான தமிழ்ப்புலவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் அடைக்கலம் தந்து போற்றியது.

மதுரை தமிழ்ச் சங்கம் மூலம் பல அரிய தமிழ்நூற்கள் வெளியிடப்பட்டன. கலிங்கத்துப்பரணி, திருக்குறள், முத்தொள்ளாயிரம், பெருந்தொகைத் திரட்டு, அபிதான சிந்தாமணி என்ற இலக்கிய புராண கலைக் களஞ்சியம் ஆகியவை வெளியிடப்பட்டன. "செந்தமிழ்" என்ற அரிய இதழ் மதுரைத் தமிழ்ச் சங்கம் மூலம் வெளிவந்தது. நாகை நீலலோசனி, ஞானபானு, விவேகபானு போன்ற தமிழ் இதழ்கள் வெளிவர சேதுபதிகள் உதவினர்.

## சேதுபதிகள் தமிழ்ப் புலவர்களுக்கு அளித்த கொடைகள்

சேதுபதிகள் ஏராளமான தமிழ்ப் புலவர்களுக்குப் பல அறகொடைகள் அளித்துள்ளனர். அவர்களில் கீழ்க்காணும் புலவர்கள் சிலர் ஆவர்.

| புலவர் | தானம் பெற்றது | வழங்கியவர் |
|---|---|---|
| 1. அமிர்த கவிராயர் | பொன்னங்கால் கிராமம் | திருமலைசேதுபதி |
| 2. அழகிய சிற்றம்பலக் கவிராயர் | மிதிலைப்பட்டி இராமநாதமடை | ,, |
| 3. அனந்த கவிராயர் | மானூர், கலையூர் | ,, |
| 4. மதுர கவிராயர் | காக்கைகுளம் | ,, |
| 5. சிற்றம்பலவையா | பரிசில்கள் | ,, |
| 6. தலமலைகண்ட தேவர் | காரடர்ந்தகுடி | கிழவன்சேதுபதி |
| 7. கும்பன் கவிராயர் | பல்லக்கு மரியாதை | ,, |
| 8. சர்க்கரைப் புலவர் | உழக்குடி, கோடாகுடி | முத்துவயிரவநாத சேதுபதி |
| 9. மதுரை சொக்கநாதப் புலவர் | பரிசில்கள் | முத்துவிஜயரகுநாத சேதுபதி |
| 10. சர்க்கரைமுத்து முருகப் புலவர் | சிறுகம்பையூர் பாகனூர் | குமார முத்துவிஜய ரகுநாத சேதுபதி |
| 11. சீனிப்புலவர் | ஓரூர் | ,, |
| 12. சாமிநாத தேசிகர் | பரிசில்கள் | ,, |
| 13. மீர்ஜவ்வாது புலவர் | வண்ணவயல் | முத்துவிஜயரகுநாத சேதுபதி |
| 14. கமுதி மன்னா ரெட்டியார் | தென்கரை | முத்துவிஜயரகுநாத சேதுபதி |
| 15. கவிக்குஞ்சர பாரதியார் | பெருங்கரை | ராணிமங்களேஸ்வரி நாச்சியார் |
| 16. சங்குப் புலவர் | ஊக்குடி | ,, |
| 17. முத்தையா புலவர் | ஊரணிக்கோட்டை | ,, |

## சேதுபதிகள் போற்றிய கலைஞர்கள்

சேதுபதிகள் சிறந்த கலைஞர்களாக இருந்தமையால் பல கலைஞர்களைத் தமது அரசவைக்கு வரவழைத்துப் பரிசில்கள் தந்து பாராட்டினர். நவராத்திரி போன்ற விழாக் காலங்களில் அழைத்து வெகுமதிகள் தந்து மரியாதை செய்தனர். பொன்னாலான காப்புகள் அணிவித்து மாதவி பட்டாடைகளைப் போர்த்திச் சிறப்பு செய்தனர். கீழ்க்காணும் கலைஞர்கள் சேதுபதிகளால் ஆதரவளித்துப் போற்றப் பட்டவர்கள் ஆவார்கள்.

மாகவைத்தியநாத ஐயர்

பட்டணம் சுப்பிரமணிய ஐயர்

திருக்கோடிக்கா கிருஷ்ண ஐயர்

மைசூர் வீணை வித்வான் சேசன்னா

குன்னக்குடி கிருஷ்ண ஐயர்

புதுக்கோட்டை மாமுண்டியா பிள்ளை

திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை

கும்பகோணம் நாட்டியமணி பானுமதி

பரிதிமால் கலைஞர் சூரிய நாராயண சாஸ்திரி

சீனிவாச ஐயங்கார்

## முத்தமிழ் வல்ல கலைஞர்களாகச் சேதுபதிகள்

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் கலைகளையும் போற்றி வளர்த்தவர்கள் சேதுபதிகள். இவற்றைப் போற்றியதோடு மட்டுமல்லாமல் தாமும் கலைஞர்களாகவும், புலவர்களாகவும் திகழ்ந்தனர். திருமலை ரெகுநாத சேதுபதி "சங்கீத நாடக நாட்டிய பிரவீனன்" என்றும், கிழவன் சேதுபதி "சங்கீத சாகித்ய வித்யா விநோதன்" என்றும் செப்பேடுகளில் சிறப்பித்துக் கூறப்படுகின்றனர். இரண்டாம் முத்துராமலிங்க சேதுபதி வடமொழியும், தமிழும் ஒழுங்கே கற்றுணர்ந்த முத்தமிழ் புலவராக விளங்கினார். "காயகாப்பிரியா"

என்ற பெயரில் இவரது தமிழ் இசைப் பாடல்கள் வெளியிடப்பட்டன. இந்துஸ்தானி இசைப்பாடல்கள் சாகித்யங்கள் "ரசிகரஞ்சனம்" வள்ளி மணமாலை, சரசசல்லாபமாலை, பாலபோதம், நீதி போதம், சடாக்கர பதிகம் என்ற பெயரில் வெளிவந்தன. இவர் தனிப் பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

வள்ளல் பொன்னுச்சாமி தேவர் தாம் இயற்றிய கீர்த்தனைகள் பலவற்றை வெளியிட்டுள்ளார். பாண்டித்துரைத்தேவர் சிவஞானபுரம் முருகன் மீது "காவடிச் சிந்து" பாடியுள்ளார். பாஸ்கர சேதுபதி திருவாலவாய்ப் பதிகம், காமாட்சியம்மை பதிகம், ராமநாதர் பதிகம் ஆகியவற்றை இயற்றியுள்ளார். மூன்றாம் முத்துராமலிங்க சேதுபதி திருக்குறள் வெண்பா மற்றும் தனிப்பாடல்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார்.

**சேதுபதிகளின் கலைப்பணிகள்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் காணப்படும் சைவ, வைணவ பெருங்கோயில்களிலும் சிறுகோயில்களிலும் உள்ள பல கட்டடங்களைக் கட்டியவர்கள் சேதுபதிகளே. இராமேசுவரம், திருப்புல்லாணி, உத்திரகோசமங்கை போன்ற பெருங்கோயில்களில் காணும் மண்டபங்கள், கோபுரங்கள், திருச்சுற்றுகள் ஆகியவற்றை கட்டியவர்கள் சேதுபதிகளே. இவற்றில் சேதுபதிகளின் உருவச் சிலைகள் கொண்ட மண்டபங்கள், பிரகாரங்கள் உள்ளன. இராமேசுவரம் கோயிலின் உலகப் புகழ்பெற்ற மூன்றாம் திருச்சுற்றினை உருவாக்கியவர்கள் சேதுபதி மன்னர்களே. அய்யனார் போன்ற கிராம தெய்வங்களுக்கும் போகலூர் போன்ற இடங்களில் சேதுபதிகள் கோயில்கள் கட்டியுள்ளனர். இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் காணும் சத்திரக் கட்டடங்கள் சேதுபதி மன்னர் காலத்தில் உருவானவையாகும்.

**சேதுபதிகளின் நீர்ப்பாசனப் பணிகள்**

சேதுபதி சீர்மை மழையை நம்பி நிற்கும் வறட்சிமிக்க பூமியைப் பெற்றதாகும். இதனால் இப்பகுதியில் ஏராளமான ஏரிகளைப்

பாண்டியர்கள் தோற்றுவித்துள்ளனர். வைகை, குண்டாறு, கிருதுமால்நதி, தேனாறு போன்ற நதிகளில் தடுப்பு அணைகள் கட்டி, அவற்றிலிருந்து வாய்க்கால்கள் வெட்டி, ஏரிகளுக்கும், ஏந்தல்களுக்கும் தண்ணீர் கொண்டு சென்றனர். பாண்டியரின் இந்நீர்பாசனப் பணிகளை அவர்களது காலத்திற்குப் பின்னர் தொடர்ந்து பராமரித்த பெருமை சேதுபதிகளுக்கு உண்டு.

கமுதக்குடிக்கு அருகே வைகையாற்றிலிருந்த ஒரு கால்வாயைக் கூத்தன் சேதுபதி (கி.பி. 1623-1635) வெட்டினார். இதனால் அப்பகுதியில் இருந்த ஏரிகள் நீரைப் பெற்றன. இக்கால்வாய் இதனைத் தோற்றுவித்த மன்னர் பெயரால் "கூத்தன்கால்" என்று அழைக்கப்பட்டு வருகிறது. ரெகுநாத சேதுபதி குண்டாற்றிற்கு வடக்கே அமைந்த பகுதியில் நீர்வளம் பெற "நாராயண காவேரி" என்ற பெயரில் ஒரு கால்வாயைத் தோற்றுவித்தார். குண்டாற்றின் கிழக்குப் பகுதி வளம் பெற முத்துவிஜய ரெகுநாத சேதுபதி தனது பெயரில் "ரெகுநாத காவேரி" என்ற பெயரில் கால்வாய் ஒன்றைத் தோற்றுவித்தார்.

இம்மன்னரே கி.பி. 1628-இல் முதலூரில் பேரேரி ஒன்றைத் தோற்றுவித்தார். அதில் மடைகள் இரண்டும் கலிங்கு ஒன்றும் அமைக்கச் செய்தார். இராஜசிங்கமங்கலத்துக் கண்மாயின் மடைகளில் இரண்டு மடைகள் "இராமநாத மடை" என்றும், "இரகுநாத மடை" என்றும், சக்கரக்கோட்டை கண்மாய் மடைகளில் ஒன்று "ராஜசூரிய மடை" என்றும் சேதுபதி மன்னர்களின் பெயரால் அழைக்கப்பட்டன. அவற்றின் அருகில் அமைந்த ஊர்களும் இப்பெயர்களில் உள்ளன.

# துணைபுரிந்த நூற்கள்

1. T. Rajaram Rao, The Manual of Ramnad Samasthanam, 1891.
2. A. Nelson, The Manual of Madura Country, 1861.
3. S. Thiruvenkatachari, The Sethupatis of Ramnad, Karaikudi, 1959.
4. R. Sathyanatha Ayyar, The History of Madurai Nayaks, 1928.
5. S. Seshatri, Sethupathi's of Ramnad, 1974, unpublished Ph.D., Thesis.
6. A. Ramasamy, Tamilnadu District Gazetteers Ramanathapuram, Madras, 1972.
7. S. Kathirvel, A History of the Maravas-1700-1802, Madurai, 1977.
8. R. Nagaswamy, Ramanathapuram District - An Archaeological Guide, Ramanathapuram.
9. சோமலே, இராமநாதபுர மாவட்டம், சென்னை, 1972.
10. இரா. நாகசாமி, இராமலிங்க விலாசம், துணை மடல், சென்னை, 1979.
11. மீ. மனோகரன், கிழவன் சேதுபதி, சிவகங்கை, 1983.
12. எஸ். எம். கமால், சேதுபதி மன்னர் செப்பேடுகள், இராமநாதபுரம், 2003.
13. எஸ். எம். கமால், சேதுபதி மன்னர் வரலாறு, இராமநாதபுரம், 2003.
14. எஸ். எம். கமால், சேதுபதி மன்னர் கல்வெட்டுகள், இராமநாதபுரம், 2002.

15. எஸ். எம். கமால், இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுக் குறிப்புகள், இராமநாதபுரம், 1984.

16. புலவர் செ. இராசு, சேதுபதி செப்பேடுகள், தஞ்சை, 1994.

17. எஸ். கந்தசாமி, சேதுபதிகளின் கலைப்பணி, மதுரை, முனைவர் பட்ட ஆய்வேடு.

18. கு. சேதுராமன், இராமேசுவரம் கோயில், மதுரை, 2000.

19. ஆறுமுக சீதாராமன், சேதுபதி காசுகள், தஞ்சை, 2005.

20. இரா. ப. கருணானந்தன், இராமலிங்க விலாசம் இராமாயண ஓவியக் குறிப்புகள், தொல்லியல் துறை, சென்னை, 1990


# நிழற்படங்கள்




அரண்மனை நுழைவாயில்




இராமலிங்க விலாசம் - முன்தோற்றம்



இராமலிங்க விலாசம் - முன்மண்டபம்



இராமலிங்க விலாசம் - மேல் தளம்



முத்துவிசைய சொக்கநாத நாயக்கர் முத்துவிசைய இரகுநாத சேதுபதிக்கு ரத்னபட்டாபிசேகம் செய்தல்



சேதுபதியை மாற்றரசர் காணும் காட்சி



சேதுபதிக்கு இராஜராஜேஸ்வரியம்மன் செங்கோல் வழங்குதல்



நங்கையரின் நாட்டியத்தைச் சேதுபதி காணல்



ஆடல், பாடல் கண்டு கேட்டு மகிழும் சேதுபதி



இரதி மன்மதனாய் இராணியும் சேதுபதியும்



சேதுபதி தேவியோடு வேட்டையாடுதல்




மதுக்குடுவைகள் நடுவில் அரசனும் அரசியும்



இராமாயணம் - கலைக்கோட்டு முனிவரைத் தூக்கி வருதல்



அகலிகை விமோச்சனம் பெறும் காட்சி



பாகவதம் - கண்ணனின் திருவிளையாடல்கள்



கோபியரின் ஆடைகளைக் கவர்ந்த கண்ணன்



தேவியருடன் ஆசனத்தில் அமர்ந்த கண்ணன்



சேதுபதியின் உருவச் சிலைகள்



தசாவதாரக் காட்சி



கண்ணாடி காணும் காரிகை



சேதுபதி



திருமால், நத்தம்பட்டி




சேதுபதியின் வண்ணப்படம்




சேதுபதி செப்பேடுகள்




வளரிகள்



திருமால், கண்ணனூர்



குத்தீட்டிகள்



வாளும் குத்துவாளும்



அண்ணாசாமி சேதுபதி



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.